AUGUST 18, 2020
TUESDAY
VOL: 006/075
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk
தமிழ்Mirror



## அரசாங்கம் பதவியேற்ற 5 நாள்களில்

# முழு நாடும் பகலில் இருண்டது

## சமிஞ்கைகள் அணைந்தன

## போக்குவரத்துகள் பாதிப்பு

## நீர் விநியோகத்தில் தடங்கல்

## ஆராய குழுவை நியமிக்க பணிப்பு

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நாடளாவிய ரீதியில் நேற்று (17) பிற்பகல் 12:35 மணிக்குத் தடைப்பட்ட மின்விநியோகம், மாலை வரையிலும் வழமைக்குத் திரும்பாமையால், பல நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததுடன், மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன.

கெரவலப்பிட்டி மின்நிலையத்தின் துணை மின் நிலைய பரிமாற்ற அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் மின்சாரத் தடை ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத் தடையால், பெருந்தெருக்கள், வீதிகள்,

தொடர்ச்சி P2

## முட்டை விலை அதிகரிப்பு



உள்ளூர்ச் சந்தையில் முட்டையொன்றின் விலை, 24 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பமான மார்ச் மாதமளவில் முட்டை ஒன்று 18 ரூபாய்க்கும் 20 ரூபாய்க்கும் இடையில் விற்பனை செய்யப்பட்டது.

அதன்பின்னர், அரசாங்கத்தின் தலையீட்டால் முட்டையொன்றின் விலை 10 ரூபாய் வரையிலும் குறைக்கப்பட்டது. எனினும், ஜூலை மாதம் 20 ரூபாய் வரையிலும் அதிகரித்திருந்தது.

இதேவேளை, சில பிரதேசங்களில் முட்டையொன்றின் விலை 25 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## 'எனது கரங்களால் ஒரு தவறும் நேராது'

■ றம்ஸி குத்தூஸ்



பல்வேறு சவால்களை நீதியமைச்சு எதிர்நோக்கவுள்ளது. அவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கையிலுள்ள அனைவருக்கும் இன மத பேதமின்றி, ஒரு தாயின் பிள்ளைகள் போல் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமானவற்றைச் செய்வதற்கு, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவேன் எனத் தெரிவித்த நீதியமைச்சர் அலி சப்ரி,

தொடர்ச்சி P2

## 'முழு அரசமைப்பையும் ஒழிக்க வேண்டும்'

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மட்டுமன்றி, முழு அரசமைப்பையும் முற்றாக ஒழித்துவிட்டு, புதிய அரசமைப்பை உருவாக்குவதே தங்களுடைய பிரதான நோக்கமாகுமென, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.



புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக இவர், தெரிவு செய்யப்படக்கூடும் என ஆரூடம் கூறப்பட்டுள்ள நிலையிலேயே, மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### 21/4 தாக்குதல்:

## மைத்திரிக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஒகஸ்ட் 26ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு, அவருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில், ஆணைக்குழுவில் முன்னிலையில், இன்று (18) ஆஜராகுமாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்தனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## புத்தசாசன அமைச்சு விவகாரம்; உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்



பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுகள், ஆகிய இரண்டு அமைச்சுகளையும் ஜனாதிபதி வகிக்கவேண்டுமென கட்டளையை பிறப்பிக்கக் கோரி, உயர்நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை மனுவொன்று, நேற்று (17) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அடிப்படை உரிமை மனுவில்,

தொடர்ச்சி P2

### மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம்

## பாதுகாப்பு நீக்கப்படும்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் குறைப்பது அல்லது நீக்குவது தொடர்பில், பாதுகாப்பு பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்குவதற்கு முன்னர், எம்.பிகளுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமா என்பது தொடர்பில் மதிப்பீட்டு

தொடர்ச்சி P2

## 'யாழ். வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை'

**போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்**

■ என். ராஜ்

வர்த்தக நிலையங்களை இரவு 10 மணிவரையிலும் திறப்பதற்கு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தொடர்பில் யாழ். வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லையெனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாண வணிகர் சங்கத்தின் உப-தலைவர் ஆர். ஜெயசேகரன், இந்த அறிவுறுத்தல் சகல பாகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றார். வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில், ஒகஸ்ட் 14ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், முக்கியமான நகரங்களில் இரவு 10 மணிவரை வர்த்தக நிலையங்களைத் திறந்து, வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

தொடர்ச்சி P2



## அலங்காரக் கந்தனுக்கு அரோகரா...



நல்லூர்க் கந்தப்பெருமானின் இரதோற்சவம், நேற்று (17) வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்: என். ராஜ்)

### ஒன்றரை வருடங்களுக்குத் தேவையான

## 'மஞ்சளை இறக்குமதி செய்ய அனுமதிப்போம்'



நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் மஞ்சள் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்வதற்கு, ஒன்றரை வருடங்களுக்குத் தேவையான மஞ்சளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமெனத் தெரிவித்த கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு,

தொடர்ச்சி P2

## 'நுண்கடனால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்'



நுண்கடன் திட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுமெனத் தெரிவித்த சமுர்த்தி, நுண்நிதி, சுயதொழில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்றார்.

தொடர்ச்சி P2

### பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்

## வெளியானது




25 மாவட்டங்களிலும் தொழில் பெறும் பட்டதாரிகளின் பெயர் பட்டியல் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளின் நியமனக்கடிதங்கள் அமைச்சின் ஊடாக, எதிர்காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் என, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ள பட்டதாரிகள்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## முட்டை விலை அதிகரிப்பு

இலங்கையில் முட்டையை நாளாந்தம் உணவுக்காக பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 85 இலட்சம் பேர் ஆவார். முட்டையின் விலை அதிகரித்துள்ளமையால், நுகர்வோரின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் குறைந்துள்ளது.

உள்ளூரில் கால்நடை தீவன விலை அதிகரித்துள்ளமையால் முட்டையின் விலை அதிகரித்துள்ளது எனவும் தீவன விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்குமாயின், முட்டையின் விலையைக் குறைக்க முடியுமெனவும் அகில இலங்கை முட்டை உற்பத்தி யாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.



## 'முழு அரசமைப்பையும் ஒழிக்கவேண்டும்'

"தன்னைச் சபாநாயகராகப் பெயர் குறிப்பிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குச் சபையிலிருக்கும் சகல உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த முன்மொழிவுக்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்றார்.

மாத்தறையில், நேற்று (17) நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். "அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்படவேண்டும். அதுதான், நாட்டுக்காகச் செய்யப்படவேண்டிய பெறுமதி வாய்ந்த பொறுப்பாகும். 19ஆவது திருத்தத்தை மட்டுமன்றி, முழு அரசமைப்பையும் முற்றாக ஒழித்துவிட்டு, புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதே தன்னுடைய நோக்கமாகும்" என்றார்.

"எனினும், 19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு, தேவையான திருத்தங்களை மட்டுமே என்னால் மேற்கொள்ள முடியும். அதன்பின்னர், சகலருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சகலரின் கருத்துகளுக்கும் இடமளித்து, நாட்டுக்குத் தேவையான உகந்த அரசமைப்பை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

அதன்பின்னர், மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்ற கேள்வி எழுகிறது. புதிய முறைமையில் அன்றி, கூடிய விரைவில் தேர்தலை நடத்தக்கூடிய பழைய முறைமையின் கீழ், மாகாண சபைத் தேர்தலை நடத்தினால். நல்லது. அதனை இன்னும் ஆறு மாதங்களுக்குள் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.



## 'நுண்கடனால்...

வடக்கு, கிழக்கு மாகாண மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு சுய கைத்தொழில் முறைமைகளை அறிமுகப்படுத்தப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த அரசாங்கத்தின் காலப் பகுதியில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலேயே, அப்பகுதி மக்கள் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் என்றார்.

# முழு நாடும் பகலில் இருண்டது

ரயில் கடவைகளின் மின் சமிக்ஞைகள் செயலிழந்தன. இதனால், போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. கடமைகளை முடித்துகொண்டு ரயில்களில் வீடுகளுக்குச் செல்லவேண்டியவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

நீர் விநியோகத்திலும் தடை ஏற்பட்டது. மோட்டார் பம்பிகளைக் கொண்டு, கிணறுகளிலிருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் குடியிருப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மின்தடை நீங்கியதன் பின்னர், இரண்டொரு மணிநேரத்துக்குள் நீர்விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரமுடியுமென, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, மின்னணுவியல் தொழில்நுட்பத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளும் வழக்கு விசாரணைகளும் தடைப்பட்டன. அதுமட்டுமன்றி, எரிபொருள் விநியோகத்துக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. இதனால், எரிபொருள்களை நிரப்பிக்கொள்வதற்காக, சில நிலையங்களுக்கு முன்பாக, வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மின்சாரத் தடை ஏற்பட்டமைக்கான காரணத்தையும் மின்தடை எப்போது நீங்கும் என்பது தொடர்பிலான தகவல்களையும் தெரிந்துகொள்வதற்கு, பொதுமக்கள் பெரும் சிரமப்பட்டனர். குறுஞ்செய்திகளின் ஊடாக, தகவல்களைப் பெற்றுக்கொண்ட பலரும், தங்களுடைய அலைபேசியின் சார்ஜ் இறங்கியவுடன் அதனை ஓரத்தில் வைத்துவிட்டனர் என அறியமுடிகின்றது.

இதேவேளை, மின்சாரத் தடையைப் பயன்படுத்தி, மெழுகுவர்த்தி, மண்ணெண்ணை ஆகியவற்றின் விலைகளை ஒருசில வர்த்தகர்கள் கூடிய விலைக்கு விற்பனை செய்துள்ளனர் எனவும் நுகர்வோர் குற்றஞ்சாட்டினர்.

> **தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்துக்கு மன்னிப்புக் கோருவதாக, இலங்கை மின்சார சபை தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்திருந்த நிலையில், கெரவலப்பிட்டி உப–மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே மின்தடைக்கான காரணம்**

"மின் தடைக்கான முழு பொறுப்பையும் இலங்கை மின்சார சபையே ஏற்க வேண்டும்" என, மின் பாவனையாளர் சங்கத்தின் தேசிய செயலாளர், சஞ்சீவ தம்மிக்க, தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நீண்ட மின்தடை 2009, 2015, 2016ஆம் ஆண்டுகளிலும் ஏற்பட்டிருந்தது. இதன்போது, இந்த மின்தடைக்கான தீர்வாக, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பல பரிந்துரைகளை முன்வைத்தது எனத் தெரிவித் அவர், ஆனால், இந்தப் பரிந்துரைகளைச் செயற்படுத்தாமல் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள், பரிந்துரைகளைக் குப்பைக் கூடையில் போட்டு, தொழில்நுட்பக் கோளாறு இருப்பதாகத் தெரிவித்து, தமது கைகளைக் கழுவிக்கொள்ள முயற்சிக்கின்றனர் என்றார்.

மின்பிறப்பாக்கி கட்டமைப்பில் கோளாறு காணப்பட்டு, நாடு முழுவதிலும் மின்தடை ஏற்பட்டுள்ளதாயின், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் 300 மெகாவோட் மின்சாரத்தைச் சேர்ப்பது என்பது அவதானம் மிக்க செயற்பாடாகும் எனத் தெரிவித்த அவர், இந்த மின்பிறப்பாக்கி கட்டமைப்பை நவீனமயப்படுத்தி, இதை உரியமுறையில் பராமரிக்க வேண்டும். இந்தப் பரிந்துரைகளையே இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைத்துள்ளது என்றார்.

இதேவேளை, இந்தத் திடீர் மின்தடை தொடர்பில், இலங்கை மின்சார சபையிடமிருந்து, அறிக்கையொன்றைக் கோரியுள்ளதாக, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத், தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

மின்பிறப்பாக்கி, கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறே மின்தடைக்கான காரணம் என்றும் லக்விஜய மின்உற்பத்தி செயற்பாடுகளில் எவ்வித கோளாறும் இல்லை என்றும் ஏனைய மின்உற்பத்திப் பிறப்பாக்கிகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், நாடு பூராகவும் ஏற்பட்ட மின் தடங்கல், தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்துக்கு மன்னிப்புக் கோருவதாக, இலங்கை மின்சார சபை தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்திருந்த நிலையில், கெரவலப்பிட்டி உப-மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே மின்தடைக்கான காரணம் என்று மின்சார அமைச்சு தெரிவித்தது.

தடைப்பட்ட மின்சார வழங்கலை, மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு, இரண்டொரு மணிநேரம் எடுக்குமென மின்சார அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்திருந்த போதிலும், தடைப்பட்ட மின்சாரம் மாலை ஆறு மணியைக் கடந்தும் வழமைக்குத் திரும்பிவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய மின்தடை தொடர்பிலான பின்னணியை ஆராயக் குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேராவுக்கு கட்டளையிட்டுள்ளதாகத் தெரிவித்த மின்சக்தி அமைச்சர், டலஸ் அழகப்பெரும, இந்தக் குழுவை இன்று (18) காலை 8.30 மணிக்கு அழைத்துள்ளதாகவும், இந்தக் குழு ஒரு வாரத்துக்குள் மின்தடை தொடர்பான அறிக்கையை வழங்கும் என்றார். இந்த மின்தடையானது, தொழிநுட்பக் கோளாரால் ஏற்பட்டதென்றும் இது நாசகாரச் செயல் அல்லவென்றும் தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதியன்று பதவியேற்றது. அமைச்சர்கள் தங்களுடைய கடமைகளை, ஓகஸ்ட் 17ஆம் திகதிக்குள் (நேற்று) பொறுப்பேற்கவேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பணித்திருந்தார்.

அரசாங்கம் ஆட்சியமைத்து ஐந்து நாள்களுக்குள் முழுநாடும் பகல் வேளையிலேயே இருண்டுவிட்டதென, சமூக வலைத்தளங்கள் உட்பட பரவலாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 'எனது கரங்களால்...



அரசமைப்புக்கும் மக்களுக்கும் எதிராக, ஒரு தவறும் எனது கைகளால் நேராது என்றார்.

தனது கடமைகளை நீதியமைச்சின் கட்டடத்தில் வைத்து, நேற்றுமாலை பொறுப்பேற்று க்கொண்ட அவர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் நலனுக்காகத் திட்டங்கள் மாத்திரமே தன்னால் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர், நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளை நன்கறிந்த நபர் என்பதாலேயே இந்தப் பதவியை, ஜனாதிபதி தனக்குத் தந்துள்ளதாகத் தெரிவித்த அவர், சிறைச்சாலைக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் உதவும் அதிகாரிகள் உள்ளனர். அந்த நிலைமையிலிருந்து மீண்டு வருவதற்கான அவசியம் தோன்றியுள்ளது என்றார்.

சட்டத்தரணியாக 20 வருடங்கள் தான், பணியாற்றி இருப்பதாகத் தெரிவித்த அவர், தனது அனுபவத்தில் நீதிப் பொறிமுறையில் ஏற்படும் தாமதங்களே, இன்று நம்முன் இருக்கும் பெரும் சவாலாகக் காணப்படுகின்றது என்றார்.

அந்தச் சவால்களை வெற்றிகொண்டு, அரசாங்கத்தின் கொள்கைளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசமைப்பின் பிரகாரமான செயற்பாடுகளைத் தான் முன்னெடுப்பதாகவும், இனவாதம் பேசிக் காலத்தையும் நேரத்தையும் வீணடிக்காமல், இன வேறுபாடுகளைக் கலைந்து, அச்சமின்றி வாழக்கூடிய வகையிலான நீதிக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான உதவிகளை, ஜனாதிபதிக்குப் பெற்றுக்கொடுக்க முன் நின்று செயற்படுவேன் என்றும் தெரிவித்தார்.

## மைத்திரிக்கு அழைப்பு

மேலும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை, ஓகஸ்ட் 21ஆம் திகதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெளியானது

செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் கடமைகளுக்குச் சமூகமளிக்க வேண்டுமெனத் அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர் பட்டியலை http:// www.pubad.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என அமைச்சு அறிவித்துள்ளது.

## புத்தசாசன அமைச்சு...

ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பில் 9,30 மற்றும் 105 (4)இன் பிரகாரம், இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். ஆகையால், புத்தசாசன அமைச்சை வேறொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஜனாதிபதியால் வழங்கமுடியாது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சை தனக்கு கீழ் ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். எனினும், புத்தசாசன அமைச்சை பெற்றுக்கொள்ளாமையின் ஊடாக, அரசமைப்பின் 9,10 மற்றும் 12.1 விதிகள் மீறப்பட்டுள்ளன என அறிவிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## பாதுகாப்பு நீக்கப்படும்

அறிக்கையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அதேபோல, தோல்வியடைந்த எம்.களுக்கு, உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்குமாயின், அவர்களுக்காகப் பாதுகாப்பு நிலைமை தொடர்பில், இதன்போது கவனம் செலுத்தப்படும்.

"முன்னாள் எம்.பிகளுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபரின் ஊடாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில், 71 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்தனர். அதில், ஆகக் கூடுதலாக ஏழு எம்.பிக்கள், கம்பஹா மாவட்டத்தில் உள்ளனர் என்பதுடன், தோல்வியடைந்தவர்களில் பெரும்பாலானோர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'யாழ். வர்த்தகர்கள் குழப்பமடைய...

அவற்றுக்கு ஏதுவாக போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முகமாகவும் நாட்டை மீள வழமைக்குக் கொண்டுவரும் வகையிலுமே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஆர். ஜெயசேகரன், இரவு 10 மணிவரையிலும் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றார்.

## 'மஞ்சளை இறக்குமதி செய்ய ...

வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, மஞ்சளை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

"ஒரு கிலோகிராம் மஞ்சள் தூளை 700 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வோருக்கு எதிராக, நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக, சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்" என்றார்.

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டியவில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில், மஞ்சளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு, ஒன்றரை வருடங்களுக்குள் மஞ்சள் உற்பத்தி செய்யப்படவேண்டும். அதுவரையிலும், நாட்டுக்குத் தேவையான மஞ்சளை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிப்போம்" என்றார்.

முன்பைப் போல, தாராளமாக மஞ்சளை இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்படாது. தாராளமாக இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தமையால், நாட்டில் சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இல்லாமல் செய்யப்பட்டு விட்டார்கள் எனத் தெரிவித் அவர், நாட்டுக்குப் போதுமான அளவு மஞ்சள் கையிருப்பில் இல்லையேல், மஞ்சள் இறக்குமதிக்கு இடமளிக்கப்படும் என்றார்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, ஜனாதிபதியின் அனுமதியுடன் அதற்கு இடமளிப்பேன் எனத் தெரிவித்த அவர், எனினும், தேவையான சிறுபயிர்களை நாட்டுக்குள்ளே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

தேவையான மஞ்சள் இருக்கிறது; எனினும், மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மஞ்சளைப் பதுக்கி, அதிகூடிய விலையில் விற்பனை செய்கின்றனர் என, நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மஞ்சளைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், நுகர்வோரைச் சங்கடப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என்றார்.

ஐ.தே.க, எ.ம.தே.க
உறுப்பினர்களைப் பெயரிடாவிட்டால்

## ஆசனங்கள் வெறுமையாகிடும்

ஐக்கிய தேசிய கட்சி, எங்கள் மக்கள் தேசிய கட்சி ஆகியவற்றுக்குக் கிடைக்கப்பெற்ற தேசிய பட்டியல் ஆசனங்களுக்கான உறுப்பினர்களை, இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக நியமிக்கத் தவறும் பட்சத்தில், அக்கட்சிகளுக்கான ஆசனங்களை வெறுமையாக வைக்கத் தீர்மானித்துள்ளதாக, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான 2 வேட்பாளர்கள் சிறைகளில் இருப்பதாகவும் நீதிமன்ற அனுமதியுடன் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வர முடியுமெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 20ஆம் திகதி கூடவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் அமர்வில், சுகாதார வழிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுமெனத் தெரிவித்த அவர், அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றார்.



நாடு முழுதும்

# 4 பொருளாதார வலயங்கள்

நாட்டுக்குள் நான்கு புதிய பொருளாதார வலயங்களை துரிதமாக நிறுவுவதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, குருநாகல் - பிங்கிரிய, ஏறாவூர், களுத்துறை - மில்லேனிய, ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலேயே, இந்த ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை நிறுவ உள்ளதாகவும் அவற்றின் நிர்மாணப் பணிகளை, துரித கதியில் நிறைவுசெய்து, அங்கு முதலீடு செய்யும் பணிகளையும் ஆரம்பிக்கவுள்ளதாக, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் பிரதானிகளுடன், நேற்று (17) நடைபெற்ற சந்திப்பொன்றின் போது தொடர்ந்துரைத்த அவர், தற்போது முதலீட்டுச் சபையின் கீழ் நடத்தப்படும் முதலீட்டு வலயங்களை, விஸ்தரிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அதற்கு மாற்றுத் தீர்வாகவே, ஏற்றுமதி வலயங்களை ஊக்குவிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, நாட்டுக்குள் வரும் முதலீடுகளுக்கான வாய்ப்புகளை விஸ்தரிக்கவே அரசாங்கம் எதிர்பாக்கின்றதெனவும் எதிர்காலத்தில், 5 - 7 சதவீதம் வரையில், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவே முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.



அத்தோடு, புதிய ஏற்றுமதிச் சந்தையின் தன்மையை அறிந்துக்கொண்டு, புதிய உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்கு அறிமுகப்படுத்த வேண்டுமெனவும், பிங்கிரிய முதலீட்டு வலயத்தின் அடித்தள வசதிகள், தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், 275 ஏக்கர் பரப்பளவு கொண்ட அந்த வலயத்தை, 12,000 ஏக்கராக விஸ்தரிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, மில்லெனிய வலயம், 24,000 ஏக்கர்களைக் கொண்டுள்ளதோடு, இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான வலயமாக அதை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் ஹம்பாந்தோட்டையில் மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் வலயமாக மேம்படுத்தத் தீர்மானித்திருப்பதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அல்செய்மர்ஸ் தொடர்பில் இணையவழி விழிப்புணர்வு

*LAF* அமைப்பு, *ayubo.life* செயலியுடன் இணைந்து, *Memorable Steps* எனும் இணையவழி அல்செய்மர்ஸ் விழிப்புணர்வை நடத்தவுள்ளது. ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம், உலக அல்செய்மர் மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அல்செய்மர்ஸ் எனும் முதுமை மறதி நோயால், ஞாபக சக்தியை இழந்து அவதியுறும் நோயாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி, இலங்கையில் உள்ள அல்செய்மர்ஸ் தொண்டு நிறுவனமான *LAF*, பாதயாத்திரை, ஓட்டப்போட்டி ஆகியவற்றை ஒவ்வொரு வருடமும் செப்டெம்பரில், அந்நோய் தொடர்பில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களாகச் செய்து வருகிறது. எனினும், இந்த வருடம் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தால், *Memorable Steps* எனும் இணையவழி அல்செய்மர்ஸ் விழிப்புணர்வை நடத்தவுள்ளது.

## ‘ஒரே சட்டக் கட்டமைப்புக்குள் முழு நாடும் உள்வாங்கப்படும்’

திருமணச் சட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக, சிறுவர் பாதுகாப்பு அதிகாரச் சபை ஆராய்ந்து வருகின்றதென தெரிவித்த பேராசிரியர் முதித விதாணபதிரன, முழு நாடும், ஒரே சட்டக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டுக்குள் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் இயலுமை பொலிஸாருக்கு இருக்கின்ற போதும், அரசியல், பண பலத்துக்கு அடிபணிந்துச் செயற்படுவதால், சில நேரங்களில் நிலைமை கைமீறிச் சென்றுவிடுவது கவலைக்குரியது என்றார்.

அதனால், பொலிஸார் மீது நம்பிக்கை இல்லையென்ற முறைபாடுகள் கிடைத்துள்ளனவெனத் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் சகல மாவட்டங்களிலும், சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகள் தொடர்பான நீதிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நீதிமன்றக் கட்டமைப்புகளை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல், பேஸ்புக் மூலம் வன்முறைகளைத் தூண்டும் விதமான செயற்பாடுகளில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதையும் அவ்வாறான செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்து பவர்களையும், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் தனிப்பிரிவொன்றை நிறுவிக் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார்.



இந்த நிலைமைகளுக்கு மத்தியில், பெண் பிள்ளைகளைப் போன்றே ஆண் பிள்ளைகளையும், மற்றுமோர் கண்ணெனக் கருதிப் பாதுகாக்க வேண்டியது அவசியமெனவும் ஆண் பிள்ளைகளது பெற்றோர்களுடனான உறவுமுறையைச் சூட்சுமமாக பிரித்துவிட்ட பின்னரே, ஆண் பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுகின்றனர் எனத் தெரியவந்துள்ளதாகவும், அவர் கூறினார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு, சட்டத்தின் கீழ் வழங்கக்கூடிய அதியுச்ச தண்டனையை வழங்க, அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதெனத் தெரிவித்த அவர், கொழும்பு, கம்பஹா, குருநாகல் உள்ளிட்ட நகரப் பகுதிகளிலேயே, அதிகளவில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர் என்றார்.

பிக்குகளுக்கு

## ‘சாசனத்தை விட ஆசனம் முக்கியமாகிவிட்டது’

பிக்குகளுக்கு புள்ளடிகளால் அன்பளிப்புச் செய்ய வேண்டாமெனத் தான் முன்பிருந்தே கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவித்த மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி, பிக்குகளுக்கு சாசனத்தை விடவும் ஆசனங்கள் முக்கியமாகிவிட்டன எனவும் சாடியுள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில், பிக்குகள் சார்பில் போட்டியிட்ட கட்சியொன்றுக்கு, நாடு முழுவதிலும் கிடைக்கப்பெற்ற வாக்குகளைக் கூட்டுச் சேர்த்து, ஓர் ஆசனம் கிடைத்துள்ளதெனத் தெரிவித்த அவர், அந்த ஓர் ஆசனத்துக்காக 4 பிக்குகள் மோதிக்கொள்வது கவலைக்குரியது என்றும் தெரிவித்துள்ளார்.

மஹிந்தலை விஹாரையில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்தரைத்த அவர், ஓர் ஆசனத்துக்காகப் போட்டியிடும் பிக்குகள், நாடாளுமன்றத்துக்குச் சென்று எதனைச் சாதிக்கவுள்ளனர் என வினவிய அவர், முஹூது மஹா விஹாரை தகர்க்கப்படும் போது, இவர்கள் வேடிக்கை பார்ப்பதை மாத்திரமே செய்தனர் எனவும் சாடியுள்ளார்.



**புத்தசாசனம் பாதுகாக்கப்படுமா எனவும் வினவியதோடு இனிவரும் காலங்களிலாவது, மக்கள் பிக்குகளுக்கு வாக்களிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டியது. ஆசனத்துக்காக அடிமட்டம் வரையில் சென்று முட்டிமோதிக் கொள்கிறார்கள்**

அதனால் சுயநலவாதிகளாகவே இந்தப் பிக்குகள் செயற்படுவதாகவும் அவர்கள், நாட்டின் மீதும் ஆகமத்தின் மீதும் பற்றுடையவர்கள் அல்லவெனவும் தெரிவித்துள்ளார்.

ஆசனத்துக்காக அடிமட்டம் வரையில் சென்று முட்டிமோதிக் கொள்கிறார்கள் எனச் சாடிய அவர், இவர்களின் போராட்டத்தால், புத்தசாசனம் பாதுகாக்கப்படுமா எனவும் வினவியதோடு இனிவரும் காலங்களிலாவது, மக்கள் பிக்குகளுக்கு வாக்களிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.


**விற்பனைக்கு**

கொழும்பு - 03, டுப்ளிகேஷன் வீதியில், 35 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குள்ளது. (ஒரு பேர்ச்சஸ் 17 மில்லியன்). அப்துல் ஜவுப்பர் மாவத்தையில், 60 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குள்ளது. (ஒரு பேர்ச்சஸ் 19 மில்லியன்). கொட்டா வீதியில், 24 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குள்ளது. (ஒரு பேர்ச்சஸ் 9.5 மில்லியன்) பத்தரமுல்ல - ஜயந்திபுரவில், 47 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குள்ளது. (ஒரு பேர்ச்சஸ் 4.5 மில்லியன்) தரகர்கள் இல்லை. 0712776776

**வேலைவாய்ப்பு**

ஹொரணையிலுள்ள இறப்பர் தோட்டம் ஒன்றுக்கு, பால் வெட்டக்கூடியவர்களைத் தேடித்தருவதற்கான கங்காணி ஒருவர் தேவை. தங்கியிருக்க வேண்டியது அவசியம். 0773135544

**விற்பனைக்கு**

ராஜகிரிய - ஒபேசேகரபுரவில், 3 அறைகளுடன் கூடிய முழுமையான வீடொன்று விற்பனைக்கு உள்ளது. தொடர்புகளுக்கு 0773908881

**பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் படி பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என்று அறிவிக்கின்றோம்.

கம்பனியின் பெயர்: **காமினி டுவர்ஸ் என்ட் டிரெவல்ஸ் (பிவீட்) எல்டீடி**

பதிவு செய்த இல: **பி வீ 00203930**

பதிவு செய்த திகதி: **08 செப்டெம்பர் 2018**

பதிவு செய்யப்பட்ட முகவரி: **இல.23/5, நைல் நிவச, போதலே, இயலகம, அபேபுஸ்ஸ**

**பணிப்பாளர் சபை**

**பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு இன் படி PV 00225302 பின்வரும் நிறுவனம் இலக்கத்தின் கீழ் மனான வீதி போறுவதன்ட என்ற முகவரியில் டி வெலீஸ் இன்வெஸ்ட்மென்ட் (பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனம் 2020 ஜுலை மாதம் 31 ஆம் திகதி தனியார் நிறுவனமாக பதிவுசெய்யப்பட்டது என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.


விமான நிலையம் திறக்கப்பட்ட பின்னர்

## தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கே அனுமதி

தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு மாத்திரமே, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தைத் திறப்பதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், இவ்வாண்டின் செப்டெம்பர் முதல், கட்டுநாயக்கா விமான நிலையம் திறக்கப்படவுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்தியா, ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, இலங்கைக்குள் நுழைய அனுமதியில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எப்போது திறக்கப்படும் என்பது தொடர்பான உறுதியான தகவல்கள் இல்லை எனவும், அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை எப்போது மீளத் திறப்பது, எந்தெந்த நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதியளிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்று, இவ்வாரத்தில் நடைபெறவுள்ளதாக, அரசாங்கத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அங்கொட லொக்காவின்

## துப்பாக்கி தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

இந்தியாவில் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டு உள்ளாரெனக் கருதப்படும் பாதாள உலகக்கோஷ்டி உறுப்பினரான அங்கொட லொக்கா பயன்படுத்தியதாகக் கருதப்படும் துப்பாக்கியொன்றைத் தேடி, இந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



இலங்கையிலிருந்த தப்பிச் சென்று, இந்தியாவில் வசித்து வந்ததாகக் கூறப்படும் அங்கொட லொக்கா, தான் வசித்த கோயம்பத்தூர் பகுதியில் துப்பாக்கியொன்றைத் தன்வசம் வைத்திருந்தார் எனத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது வரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், அங்கொட லொக்காவால் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளை அவருடைய காதலியெனக் கருதப்படும் அமானி தாஞ்சி, அங்கொட லொக்காவின் உடலை தகனம் செய்வதற்கு உதவியதாகக் கூறப்படும் சிவகாமி சுந்தரி ஆகியோரால், குறித்த துப்பாக்கியானது, கோயம்பத்தூரில் வைத்து இலங்கையர் ஒருவரிடத்தில் வழங்கப்பட்டுள்ளதெனத் தெரியவந்துள்ளது. இந்நிலையிலேயே, குறித்த துப்பாக்கி தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




யாழ். மாநகர சபைக்கு

# ‘நிதி நெருக்கடி’

■ என்.ராஜ்

யாழ்ப்பாணம் மாநகர சபை, இவ்வருடம் அதிக நிதி நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தொடர்ந்துரைத்த அவர், கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக, யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான சுமார் 349 கடைகளுக்கான இரண்டு மாத வாடகைக்கு, சபை அனுமதியோடு விலக்களிப்பு அளிக்கப்பட்டுள்ளதென்றார்.

மேலும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, இம்முறை நல்லூர்க் கந்தன் கோவில் உற்சவ காலத்தில், தற்போதைய கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், இதன் காரணமாக, மாநகர சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதெனவும் கூறினார்.



“நல்லூர் கோவில் உற்சவத்தின் போது, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வருடாந்தம் 15 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கின்ற போதும், சபை ரீதியான செயற்பாடுகளுக்காக சுமார் 70 இலட்சம் செலவு செய்யப்படுவது வழமை.

இம்முறை நல்லூர் உற்சவ காலத்தில், அனைத்துச் செலவுகளையும் சபையே பொறுப்பேற்க வேண்டிய நிலை காணப்பட்டது” எனவும், லோகதயாளன் தெரிவித்தார்.

ஏனைய துறைகளை எடுத்துக்கொண்டால், சந்தை வருமானம் போன்ற ஏனைய வருமானங்களும், கொரோனா தொற்று காரணமாகக் குறைந்தளவாகவே சபைக்குக் கிடைத்துள்ளனவெனவும், அவர் கூறினார்.

இதனால், இவ்வாண்டில் பெரும் நிதி நெருக்கடியை, தமது மாநகரசபை ஏதிர்கொண்டுள்ளதெனத் தெரிவித்த அவர், இதன்தாக்கம் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் தான் வெளிப்படுமெனவும் கூறினார்.

பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய

## பேருவளை பிரதேச சபை உறுப்பினர் கைதானார்

■ துஷிதகுமார சில்வா



இரவில் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டுமானப் பணி தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய பேருவளை பிரதேச சபையின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தர்காநகர், அதிகாரிகொட பிரதேசத்தில் பேருவளை பிரதேச சபைக்குரிய மாலவென்கொட வீதியில் உள்ள வடிகான் கட்டமைப்பு ஊடாக அமைக்கப்பட்ட சட்டவிரோத கட்டுமானம் தொடர்பில், அளுத்கம பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (16) கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, விசாரணை செய்வதற்காக பொலிஸ் குழுவொன்று, சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளது.

இதன்போது, பேருவளை பிரதேச சபையின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதையடுத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டு. மேற்கில்

## வலயக் கல்விப் பணிப்பாளர் கடமையைப் பொறுப்பேற்றார்



■ வ.திவாகரன், வா.கிருஸ்ணா, க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளராக, அகிலா கனகசூரியம், நேற்று (17) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தக் கல்வி வலயத்துக்கு, கல்வி நிர்வாகச் சேவை வகுப்பு 1ஐ சேர்ந்தவரை நியமிக்கும் பொருட்டு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால், அண்மையில் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது. இந்த நேர்முகத் தேர்வில், அதிக புள்ளிகளைப் பெற்ற அகிலா கனகசூரியம், வலயக் கல்விப் பணிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று முதல் செயற்படும் வண்ணம், இந்நியமனக்கடிதம் கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, நேற்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

**“ மீண்டும் குறித்த வலயத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது**

இவர், கல்வியமைச்சின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியதுடன், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இந்நிலையில், மீண்டும் குறித்த வலயத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதாவுல்லாவுக்கு

## அமைச்சு வழங்குமாறு பிரதமருக்குக் கடிதம்

■ றியாஸ் ஆதம்



தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்கு, அந்தஸ்துள்ள அமைச்சு ஒன்றை வழங்குமாறு கோரி, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நேற்று (17) கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், “அதாவுல்லாவுக்கு ஓர் அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்படுமென, கிழக்கு மாகாண மக்கள் எதிர்பார்ப்புடன் இருந்த போதும், இறுதி நேரத்தில் அந்த விடயம் இடம்பெறவில்லை. குறித்த அமைச்சரவையில் அதாவுல்லா இல்லாமை கிழக்கு மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

“அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள், சகல மாவட்டங்களுக்கும் தலா ஒன்று வழங்கப்பட்ட போதிலும், அவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. அமைச்சுகளை 28ஆகக் குறைத்தமையால், அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருந்தாலும், ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தையும் உள்ளடக்கியதாக ஓர் அமைச்சையாவது வழங்கியிருக்க வேண்டுமென்பது இப்பிராந்திய மக்களின் எதிர்பார்ப்பாகும்” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

7 யானைகள் இறப்பு;

## ‘காரணத்தைக் கண்டறிய தாமதமடையும்’



■ காஞ்சனகுமார ஆரியதாஸ

2019ஆம் ஆண்டில், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில், ஹபரனை, தும்பிகுளம் காட்டில், 07 யானைகள் இறந்தமைக்கான காரணத்தை முன்வைக்க மேலும் பல மாதங்கள் தேவையென, வனஜீவராசிகள் அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க தெரிவித்தார்.

தம்புளை மாநகர சபையில், நேற்று முன்தினம் (16) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துரைக்கையில், “வனஜீவராசிகள் திணைக்களத்தில் பணியாற்றும் பலர், கவலையுடனேயே பணியாற்றுவதாகவும் அவர்களிடம், சேவைக்கான திருப்தி இல்லாமல் ஏமாற்றத்துடன் பணியாற்றுகின்றனர்” என்றும் கூறினார்.

“எனவே, எதிர்காலத்தில் அந்தப் பணியாளர்கள் திருப்தியுடன் பணியாற்றும் வகையில், அதிகாரிகள், வனஜீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள் இரண்டையும் ஒன்றாக நடத்திச் செல்லத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.

“மக்களைப் போன்றே, விலங்குகளையும் பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது. அதற்கமைய, சுற்றாடல் துறைக்கு விலங்குகள் பாரிய ஒத்துழைப்பை வழங்குவதால், நாம் பொறுப்புடன் சில தீர்மானங்களை எடுக்க வேண்டும்” என்றார்.

45 சந்தேகநபர்களின்

## வங்கிக் கணக்குகளில் ரூ.2,200 மில்லியன் பணப் பரிமாற்றம்

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 45 பேரின் வங்கிக் கணக்குகளில் இருந்து 2,200 மில்லியன் ரூபாய் பரிமாற்றப்பட்டுள்ளதென, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில், கடந்த 7 நாள்களில் பெண்ணொருவர் உள்ளடங்கலாக 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த 45 பேரும், நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இவர்களின் வங்கிக் கணக்குகளில் 2,200 மில்லியனுக்கு அதிகமான பணம் பறிமாற்றப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், அந்த வங்கிக் கணக்குகளில் அந்தப் பணம் இப்போது இல்லை என்றும் இது தொடர்பான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மன்னாரில் மஞ்சள் தூள்

## பதுக்கி வைத்து விற்பனை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் - பஸார் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில், மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு, அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அதாவது, 100 கிராம் மஞ்சள் தூள் 350 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், ஒரு கிலோகிராம் மஞ்சள் தூள் 3,500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை, பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



கிண்ணியா, மூதூர் வைத்தியசாலைகளில்

## வைத்திய நிபுணர்களை நியமிக்க நடவடிக்கை

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா, மூதூர் வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்திய நிபுணர்களை நியமிப்பதற்கு, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதற்கமைய, பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஸ்ரீதரன், பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பனாப்பிட்டிய ஆகியோரை, கொழும்பில் வைத்து நேற்று (17) அவர் சந்தித்தார்.



இந்தச் சந்திப்பின் போதே, மேற்படி வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்களை நியமிப்பது தொடர்பிலும் வைத்தியசாலைகளில் உள்ள குறைகள் தொடர்பிலும், தௌபீக் எம்.பி எடுத்துரைத்துள்ளார்.

## ஆசிரியர் மீது தாக்குதல்

■ என்.ராஜ்

இளவாலையில், நேற்று (17) காலை 7.30 மணியளவில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த ஆசிரியர் ஒருவர், இனந்தெரியாத குழுவினரால் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அரியாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே, இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நால்வர், ஆசிரியரை வீதியில் வழிமறித்து, அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனரென, இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான ஆசிரியர், பாடசாலை அதிபர் ஊடாக இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## கோப்பாய் பொலிஸார் மீது தாக்குதல்

■ டி.விஜித்தா, எஸ்.நிதர்ஷன், என்.ராஜ்

யாழ்ப்பாணம் - ஊரெழு பகுதியில், நேற்று முன்தினம் (17), பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரைக் கைதுசெய்யச் சென்ற கோப்பாய் பொலிஸார் மீது, தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஊரெழு, போயிட்டி பகுதியைச் சேர்ந்த நபரொருவரைக் கைதுசெய்வதற்காக கோப்பாய் பொலிஸார் இருவர், அப்பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று, சந்தேகநபரைத் தேடியுள்ளனர்.

இதன்போது, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும்




பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அந்த முரண்பாடு தொடர்பாக விசாரணை செய்யச் சென்ற பொலிஸார் மீதே, இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில்,2 பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக, கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


புத்தளம் மாவட்டத்தில்

## பெரிய வெங்காய உற்பத்தி வெற்றி

■ ஹிரான் பிரியங்கரர

புத்தளம் மாவட்டத்துக்குள் பெரிய வெங்காய உற்பத்தியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென, விவசாய ஆலோசகர்கள், விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன், உற்பத்தியில் வெற்றியும் கண்டுள்ளனர்.

பெரிய வெங்காய உற்பத்தி, நாட்டின் சில பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், புத்தளம் மாவட்டத்தில் விவசாய ஆலோசனைகளின்



கீழ், பெரிய வெங்காய உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளதென, விவசாய ஆலோசகர் என்.ஏ.டி. கயான் தெரிவித்தார்.

இலங்கையின் பெரிய வெங்காயத் தேவையில் 90 சதவீதத்துக்கு அதிகமானவை,

**“ பெரிய வெங்காயத் தேவையில் 90 சதவீதம், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் காரணமாக, இலங்கை பாரிய நிதியை இழக்கிறது**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் காரணமாக, இலங்கை பாரிய நிதியை இழப்பதாகவும் இதனால், விவசாய அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் புத்தளம் மாவட்டத்தில் பெரிய வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி

## மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

■ சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால், நேற்று (17) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு வகையிலும் பின்தங்கிக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சீராக இயங்காததால், மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும்



பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படாததன் பின்னணியிலேயே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கந்தையா சிவநேசன், துரைராசா ரவிகரன், ஆண்டிஐயா புவனேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, போராட்டம் இடம்பெற்ற பகுதியில், முள்ளியவளை பொலிஸார், புலனாய்வாளர்கள் உள்ளிட்ட பலரும், கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கான தீர்வு கிடைக்கும் வரை, தொடர்ச்சியாகச் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் முன்னெடு க்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோமாலியா

## மொஹடிஷு ஹொட்டல் முற்றுகையில்

# 16 பேர் பலி

சோமாலியத் தலைநகர் மொஹடிஷுவிலுள்ள கடற்கரையை நோக்கிய நட்சத்திர ஹொட்டல் ஒன்றின் மீது, அல்-ஷபாப்பால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி, குண்டுத் தாக்குதலில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதுடன், டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

தற்கொலைக் கார் குண்டுத் தாக்குதலொன்றுடன் ஆரம்பித்த அல்-ஷபாப் ஆயுததாரிகள், பாதுகாப்புப் படைகளுக்கிடையிலான மூன்று மணித்தியாலங்கள் நீடித்த கடும் துப்பாக்கிச் சண்டையானது நேற்று முன்தினம் முடிவடைந்திருந்ததாக சோமாலிய அரசாங்கப் பேச்சாளர் இஸ்மயில் முக்தார் ஓமர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உயிரிழந்தோரில் 11 பொதுமக்களும் ஐந்து




தாக்குதலாளிகளும் உள்ளடங்குவதாக டுவிட்டரில் இஸ்மயில் முக்தார் ஓமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வைத்தியசாலைகளுக்குக் குறைந்தது 43 பேரைத் தாம் கொண்டு சென்றதாக ஆமின் அம்பியுலன்ஸ் சேவைகளின் பணிப்பாளர் வைத்தியர் அப்டிகாதிர் அப்டிரஹ்மான் நேற்று (17) தெரிவித்துள்ளார்.

ஹொட்டலின் பாதுகாப்பு வேலிகளைத் தகர்த்த சக்திவாய்ந்த கார்க் குண்டுத் தாக்குதலொன்றையடுத்தே பிற்பகலில் தாக்குதல் தொடங்கியிருந்தது. பின்னர் துப்பாக்கிதாரிகள் உள்ளே ஓடிச் சென்று, அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பெரும்பாலான இளைஞர், யுவதிகளைப் பணயக்கைதிகளாகப் பிடித்ததாக அப்டிகாதிர் அப்டிரஹ்மான் மேலும் கூறியுள்ளார்.

குறித்த ஹொட்டலானது சோமாலிய நாடாளுமன்ற உறுப்பினரொருவரும் முன்னாள் நிதியமைச்சரான அப்துல்லாஹி மொஹமட் நோரால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன், அரசாங்க அதிகாரிகளாலும் சோமாலிய புலம்பெயர்ந்தவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

'சைட்' புலனாய்வுக் குழுவால் மொழிபெயர்க்கப்பட்ட அறிக்கையொன்றின்படி, தாம் தாக்குதலை நடத்தியதாக அல்-ஷபாப் தெரிவித்துள்ளது.

ஐ. அமெரிக்கா

## கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கை

# 170,000ஐத் தாண்டியது




ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்று (17) முற்பகல் 10.30 மணி வரையில் கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 170,043ஆகக் காணப்பட்டதுடன், அங்கு கொவிட்-19 தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கையானது 5,421,438 ஆகக் காணப்படுகின்றது.

பிரேஸிலானது நேற்று முன்தினம் (16) புதிதாக கொவிட்-19ஆலான 620 புதிய இறப்புகளையும் 23,101 புதிய கொவிட்-19 தொற்றுகளையும் பதிவுசெய்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ள நிலையில், அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 3,340,197ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 107,852ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது, நேற்று (17) காலை எட்டு மணிவரையில் 57,981 ஆல் அதிகரித்து 2,647,663ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 941-ஆல் அதிகரித்து 50,921ஆகக் காணப்பட்டிருந்தது.

ரஷ்யாவானது புதிதாக 4,892 கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரைப் பதிவு செய்துள்ள நிலையில், அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 927,745ஆக அதிகரித்துள்ளதுடன், கடந்த 24 மணித்தியாலங்களில் கொவிட்-19ஆல் 55 பேர் இறந்த நிலையில் அங்கு கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 15,740ஆக அதிகரித்துள்ளது.

அந்தவகையில், உலகளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 21.74 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன், கொவிட்-19ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 775,784ஆக அதிகரித்துள்ளது.

இந்தியா

## ஜம்மு காஷ்மிர்

# பரமுல்லா தாக்குதலில் 3 படையினர் பலி



இந்தியாவின் ஜம்மு காஷ்மிரின் தலைநகர் ஸ்ரீநகரிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பரமுல்லா மாவட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த, மத்திய துணைப்படைப் பொலிஸார் இருவரும், ஜம்மு காஷ்மிரின் பொலிஸாரொருவருமாக மூன்று பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கிறீரியிலுள்ள சோதனைச்சாவடியொன்றில் மத்திய துணைப்படைப் பொலிஸார், ஜம்மு காஷ்மிர் பொலிஸாரின் இணைந்த அணியொன்று கடமையிலிருக்கும்போதே சில பயங்கரவாதிகள் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், தாங்கள் மூன்று படைவீரர்களை இழந்ததாகவும், சம்பவ இடத்துக்கு உதவிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் விஜய் குமார் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதலையடுத்து தாக்குதலாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நேற்று பிற்பகலில் ஒரு பயங்கரவாதி கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இரண்டு பேர்

> **ஸ்ரீநகரிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பரமுல்லா மாவட்டத்தின் சோதனைச்சாவடியொன்றில் மத்திய துணைப்படைப் பொலிஸார், ஜம்மு காஷ்மிர் பொலிஸாரின் இணைந்த அணியொன்று கடமையிலிருக்கும்போதே சில பயங்கரவாதிகள் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்**



# பெலாரஸில் ஜனாதிபதியை பதவி விலகுமாறு...

பெலாரஸில் நீண்ட காலமாகப் பதவியில் இருந்து வரும் ஜனாதிபதியான அலெக்ஸான்டர் லுகஷென்கோ, மோசடியாக மீளத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறிய பெலாரஸியர்கள், பதவி விலகுமாறு கோஷமெழுப்பி இதுவரையிலான மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக பெலாரஸ் தலைநகர் மின்ஸ்கின் மய்யத்தை சூழ்ந்திருந்தனர்.

ஐ. அமெரிக்கா

## சின்சினாட்டியில் 18 பேர் சுடப்பட்டனர்:

# நால்வர் இறந்தனர்

ஐக்கிய அமெரிக்காவின் சின்சினாட்டி நகரத்தில், மிகவும் வன்முறையான இரவொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடுகளில், சுடப்பட்ட 18 பேரில் நால்வர் இறந்துள்ளனர்.

வோல்நட் மலைப் பிராந்தியத்தில் நேற்று முன்தினம்(16) நள்ளிரவு மூவர் சுடப்பட்டவுடனே இந்த வன்முறை ஆரம்பித்திருந்தது.

பின்னர் அவஒன்டலே பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒருவரைப் பொலிஸார் கண்டெடுத்த நிலையில் அவர் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறந்ததாக அறிக்கையொன்றில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் றிஹைன் பகுதியில் 10 பேர் சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்த நிலையில், சம்பவ




இடத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு, சின்சினாட்டி பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

உள்ளூர் ஊடகங்களின் தகவலின்படி துப்பாக்கிச்சூடுகள் ஒவ்வொன்றுக்கும் 60 தொடக்கம் 90 நிமிட இடைவெளிகளில் ஒவ்வொன்றும் தனித்தனிச் சம்பவங்களாக இடம்பெற்றுள்ளன.

நான்காவது சூட்டுச் சம்பவத்தைப் பற்றி பொலிஸார் தகவலை வழங்காதபோதும் சின்சினாட்டியின் மேற்குப் பகுதியில் இடம்பெற்றதாக உறுதிப்படுத்திய நிலையில் ஒருவர் சுடப்பட்டதாகவும், சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல்

## உறவுகளை முறைமைப்படுத்துவதில்

# 'ஐ.அ. அமீரகத்தை பஹ்ரேய்ன், ஓமானும் தொடரும்'

இஸ்ரேலுடனான உறவுகளை முறைமைப்படுத்துவதில் ஐக்கிய அரபு அமீரகத்தைப் பின்பற்றும் அடுத்த வளைகுடா நாடுகளாக பஹ்ரேய்னும் ஓமானும் இருக்கும் என நம்புவதாக இஸ்ரேலின் புலனாய்வு அமைச்சர் எலி கொஹென் நேற்று முன்தினம் (16) தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனப் பிரச்சினையிலிருந்து ஈரானுக்கெதிராகப் போராடுவதற்காக மத்திய கிழக்கு அரசியலை மாற்றியமைப்பதாகவும், இராஜதந்திர உறவுகளை வழமைப்படுத்துவதாகவும் இஸ்ரேலும், ஐக்கிய அரபு அமீரகமும் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தன.

இந்நிலையிலேயே, குறித்த இணக்கத்தின் வழி மேலதிக இணக்கங்கள், மேலதிக வளைகுடா நாடுகள், ஆபிரிக்காவிலுள்ள முஸ்லிம் நாடுகளிலிருந்து வரும் என எலி கொஹென், இராணுவ வானொலிக்குத் தெரிவித்துள்ளார்.

பஹ்ரேய்ன், ஓமான் ஆகிய நாடுகள் நிச்சயமான நிகழ்ச்சி நிரலிலுள்ளன எனத் தான் நினைப்பதாகவும், மேலதிகமாகத் தனது ஆய்வில் ஆபிரிக்காவிலுள்ள நாடுகளுடன் சமாதான ஒப்பந்தமொன்று இருக்கும் எனவும் அதில் பிரதானமானது சூடானெனவும் எலி கொஹென் மேலும் கூறியுள்ளார்.



நியூசிலாந்து

## நியூசிலாந்தின் பொதுத் தேர்தல்

# ஒக்டோபர் 17க்கு ஒத்திவைப்பு

நியூசிலாந்தின் பொதுத் தேர்தலை, ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு மாதமொன்றால், நியூசிலாந்தின் பிரதமர் ஜசிந்தா ஆர்டன் நேற்று (17) ஒத்திவைத்துள்ளார்.


வளர்ச்சியடைந்து வரும் கொவிட்-19 பரவல் காரணமாக, நியூசிலாந்தின் ஒக்லாந்தானது தொடர்ந்தும் முடக்கநிலையிலேயே உள்ளதால், பிரதமர் ஜசிந்தா ஆர்டன், பொதுத் தேர்தலை மாதமொன்றால் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

நியூசிலாந்தின் ஐந்து மில்லியன் பேரில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் ஒக்லன்டில் முடக்கத்தின் கீழுள்ள நிலையில், கட்சிகள் பிரசாரம் செய்ய முடியாது என முறையிட்டதையடுத்தே, தேர்தலைத் தாமதப்படுத்தும் அழுத்தத்துக்கு பிரதமர் ஜசிந்தா ஆர்டன் பணிந்துள்ளார்.

இந்நிலையில், பிரசாரம் செய்வதற்குத் திட்டமிடுவதற்கு இவ்வாண்டு ஒக்டோபர் 17ஆம் திகதியானது போதுமான நேரத்தை அளிப்பதாக செய்தியாளர் மாநாடொன்றில் பிரதமர் ஜசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், கருத்துகணிப்புகளில் பழைமைவாத தேசிய கட்சியை விட, பிரதமர் ஜசிந்தா ஆர்டனின் தொழிலாளர் கட்சி பலமான முன்னிலையில் இருக்கின்ற நிலையில், தேர்தல்களை மேலும் தாமதப்படுத்துவதை பிரதமர் ஜசிந்தா ஆர்டன் மறுத்துள்ளார்.

முன்னதாக, செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதாக இருந்ததுடன், நியூசிலாந்தின் சட்டத்தின்படி இவ்வாண்டு நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர், தேர்தலை நடத்த வேண்டும்.



# அஞ்சாத அலி சப்ரியின் முன்னிருக்கும் பொறி

கண்டி ‘மகுல்மடுவை’யிலிருந்து, பலர் வெறுங்கையுடனும் இன்னும் சிலர் அதிருப்தியுடனுடம் திரும்பினர். இந்நிலையில், பொதுஜன பெரமுனவின் நியமன எம்.பியான அலி சப்ரிக்கு, நீதியமைச்சைப் பொறுப்பளித்தமை, சிறுபான்மை இனத்தினரிடையே ஓர் ஆறுதலை ஏற்படுத்தியிருந்தது.

மகுல்மடுவ, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் இருக்கிறது. அங்குதான் புதிய அமைச்சரவை பதவியேற்றது. மாளிகைக்கு எதிரேயிருக்கும் குளத்தின் கரையை மேவி, வாயைப் பிளக்கும் மீன்களுக்குப் பலரும் ‘பொரி’ போடுவார்கள். ஆனால், அம்மீன்களைப் பிடிப்பது குற்றமாகும்; ‘பொறி’ வைக்கக்கூடாது.

ஆட்சிபீடமேற உதவிய தங்களுக்கு, அமைச்சோ இராஜாங்க அமைச்சுப் பதவியோ கிடைக்கவில்லையெனப் பலரும் அதிருப்தியுற்றுள்ளனர். தங்களுடைய விடயதானங்களுக்கு அப்பால், அமைச்சுகள் பகிரப்பட்டிருந்தாலும் வெளிப்படுத்தாமல் இன்னும் சிலர் மௌனமாகவே இருந்துவிடுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபயவுடனான உத்தியோகபூர்வ புகைப்படத்தில், இராஜாங்க அமைச்சர்களான விமலவீர திஸாநாயக்க, பிரியங்கர ஜயரத்ன, லொஹான் ரத்வத்த ஆகியோர் நிற்கவில்லை. அதுவும் அதிருப்தியின் வெளிப்பாடாகும்.

புதிய அரசாங்கத்தில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி ஆகியோர் மட்டுமே அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். அதில், நீதியமைச்சரான அலி சப்ரியின் வகிபாகம் முக்கியமானதாகும். ஏனெனில், அவர் பொறிக்குள் சிக்கியுள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்தும் விடயத்தில், “எவருக்கும் அஞ்சப்போதில்லை” எனத் தெரிவித்திருக்கும் நீதி அமைச்சர் அலி சப்ரியின் கீழ், அலுவலகங்கள், திணைக்களங்கள் உள்ளடங்களாக 17 நிறுவனங்கள் உள்ளன. அதில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் ஆகியனவும் அடங்கியுள்ளன.


சகல சமூகங்களையும் நேசிக்கும் வகையில், பவ்வியமான கருத்துகளை அலி சப்ரி வெளியிடவேண்டும். எனினும், அவர், பொறிக்குள் சிக்கியுள்ளார் என்பது யதார்த்தம்.


ஜனாதிபதியும் பிரதமரும் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே, அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில், 19ஆவது திருத்தம் கைக்கட்டுப் போடும். ஆனால், ஜனாதிபதியும் பிரதமரும் சகோதரர்களாக இருக்கும் போது, 19ஐ திருத்த அவசரப்படக்கூடாது.

ஆனால், புதிய அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளமையால், சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைப்பதே, முன்னிற்கும் பிரதான சவாலாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

வர்க்க பேதம் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றது. செல்வம், செல்வாக்கு எல்லாமே, குறிப்பிட்ட சாராரிடமே இருக்கும்போது, எப்படி பேதங்கள் ஏற்படாமல் இருக்கும்?

சாதி, சமயம், மொழி ஆகியவையால் ஏற்படும் பேதங்களைவிட, செல்வம் ஓரிரு இடங்களில் குவியும் போதுதான், குறிப்பிட்ட சமூகம் சார்ந்த மேற்றட்டு மக்கள், தங்களைப் போன்ற வசதிகூடியவர்கள் இடத்திலேயே மட்டும் சகலவிதமான நட்பையும் உறவுகளையும் பேணிவருவார்கள்.

இவர்கள், கீழ்த்தட்டு மக்கள் தங்களைத்தாண்டி, முன்னேறுவதற்கு உதவமாட்டார்கள். அவர்களின் வளர்ச்சியை, முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவே முனைவார்கள்.

முற்காலத்தில், அரச குடும்பங்கள், இன்னுமோர் அரச குடும்பத்துடன் மட்டுமே தொடர்பைப் பேணும். தற்போது, பணபலத்தை மட்டுமே வைத்து, வர்க்கங்களின் வலு எடைபோடப்படுகின்றது. இங்கு சாதி, சமயம், இனம் பற்றிய விடயங்களில் அக்கறை செலுத்துவதில்லை. பணம், அந்தஸ்து மட்டுமே பிரதானமாக் கருதுகின்றார்கள். பொதுவுடைமை பேசப்படும் விடயமாகவே இருக்கும். செயலில் அல்ல!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அறுதிப் பெரும்பான்மையில்
# சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்காலம்

**மொஹமட் பாதுஷா**

சுதந்திர இலங்கையில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்றிலிரண்டு அறுதிப் பெரும்பான்மையுடனான ஆட்சியை இம்முறை, பொதுஜன பெரமுன நிறுவிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பலம், ஆட்சியாளர்களுக்குத் தாம் நினைத்ததைச் செய்யக் கூடிய இயலுமையை வழங்கும். இதற்காகவே, படாதபாடுபட்டு 150 ஆசனங்களைப் பொதுஜன பெரமுன பெற்றிருக்கின்றது.

ஆனால், முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் அடுத்துவரும் ஐந்து வருடங்களில் வசந்தகாலம் நிலவுமா என்ற கேள்விக்கு, பொறுத்திருந்துதான் விடை காண வேண்டும்.

தேர்தல் முடிவுகளை ஆழமாக அலசுகின்றவர்கள், மூன்றிலிரண்டு பெரும்பான்மை வெற்றி என்பதற்கு அப்பால், மேலும் பல விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். அதாவது, சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களில் கணிசமானவர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிளவுபட்ட அணியினரால் கட்டமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியும் நாட்டின் பிரதான கட்சிகளாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன.

இந்தப் பின்னணியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் பிரதான அரசியல் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன், ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன போன்றோர் புறமொதுக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், சிங்களப் பகுதிகளில் பொதுஜன பெரமுனவே பெரும்பாலும் வெற்றியீட்டியுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியில், சிங்கள மக்களின் விகிதாசாரப் பங்களிப்பை விட, ஒப்பீட்டளவில் முஸ்லிம்கள், தமிழர்களின் வகிபாகம் அதிகமாகக் காணப்படுகின்றது போல ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. எம்.பிகளின் எண்ணிக்கையிலும் இதை அவதானிக்கலாம்.

இதன்மூலம், மொட்டு அணிக்கே பெரும்பான்மை மக்கள், ஆணை வழங்கி இருக்கின்றார்கள், சஜித் அணியை, அவர்கள் அங்கிகரிக்கவில்லை என்ற தோற்றப்பாடு, கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது. பெரும்பான்மை மக்களில், கிட்டத்தட்ட 75 சதவீதமானோர் மொட்டுச் சின்னத்துக்கு ஆதரவளித்து இருப்பதாகவும் ரணிலை முற்றாகப் புறக்கணித்துள்ளதாகவும் சஜித் அணியைக் கூட, அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் குறிப்புணர்த்தும் வகையிலேயே தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளதாகச் சொல்லலாம்.

இவ்வளவுக்கும் மத்தியில், ‘விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்ற கோதாவில், தமிழர்களும் முஸ்லிம்களும் தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தி இருக்கின்றனர். ஆனாலும், பெருமளவான சிறுபான்மையின எம்.பிக்கள் எதிர்த்தரப்பிலேயே அமரவுள்ளதாலும், ஆளும் தரப்பில் இருக்கின்ற சிறுபான்மையின எம்.பிக்களுக்கும் ‘கட்டுப்பாடுகள்’ இருக்கின்றமையாலும், அமையப் போகின்ற நாடாளுமன்றம், சிறுபான்மையின மக்களுக்குச் சாதகமானதாக அமையுமா என்ற சந்தேகம் எழவே செய்கின்றது.

பொதுவாகவே, அறுதிப் பெரும்பான்மை என்பது, சிறுபான்மையின சமூகங்களுக்கு அவ்வளவு நல்ல சகுணங்களாக இருப்பதில்லை. ஏனெனில், ஜே.ஆர் ஆட்சியின் அனுபவங்கள் அப்படிப்பட்டவை! தமது, மிக நீண்டகால ஆட்சிக் கனவை நனவாக்குவதற்காக, ஆறில் ஐந்து பலம் பயன்படுத்தப்பட்ட வரலாறுகளே அதிகம். அதற்காக, அமையும் புதிய அரசாங்கமும் அவ்விதமே செயற்படும் என்று உறுதியாகக் கூறிவிடவும் முடியாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, இந்த நாட்டைப் பல வருடங்கள் ஆட்சி செய்து விட்டார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ இப்போதுதான் சிம்மாசனம் ஏறியுள்ளார். இந்தப் பின்புலத்தில், ராஜபக்‌ஷ குடும்பத்துக்கு நெடுங்காலம் ஆட்சியதிகாரத்தில் நிலைத்திருப்பதற்கான விருப்பம் இருக்கின்றது என்பது, பொதுவான அபிப்பிராயமாகும்.

எனவே, புதிய அரசாங்கம் முஸ்லிம்களையும் தமிழர்களையும் அரவணைத்துச் செல்லும் வாய்ப்புள்ளதாகக் கூறலாம். அதனையே குறிப்பாக, முஸ்லிம்கள் அவாவி நிற்கின்றனர்.

அரசியல் காரணங்களுக்காகவே இலங்கையில் இனவாதமும் மதவெறுப்பும் தோற்றுவிக்கப்பட்டன; ஊக்குவிக்கப்பட்டன. அந்த வகையில் நோக்கினால், பொதுஜன பெரமுனவுக்கு இப்போது, அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. எதிர்க்கட்சியில் உள்ள சில முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளடங்கலாகப் பலர், ‘பெல்டி’ அடிக்கத் தயாராக இருக்கின்றனர். எனவே, அளவுக்கு மிச்சமான பலம் ராஜபக்‌ஷக்களுக்குக் காணப்படுகின்றது.

எனவே, சிறுபான்மையின மக்களை, இனவாத சக்திகள் சீண்டுவதன் மூலம், நாட்டில் குழப்பகரமான நிலை ஏற்படுவதை அரசாங்கம் விரும்பாது. இப்போது, ஆளும் தரப்புக்கு எல்லாம் கிடைத்து விட்டதால், அப்படியொரு தேவை இல்லை. அத்துடன், வேறு யாரும் இதைச் செய்தாலும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது என்றும் எடுத்துக் கொள்ளலாம். எனவே, முஸ்லிம்களையும் தமிழர்களையும் வரையறுக்கப்பட்ட மட்டத்தில் வைத்து மனம் கோணாமல் கையாள்வதற்கே ஆட்சியாளர்கள் விரும்பலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆனால், அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு, கடந்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற நகர்வுகள் முன்னெடுக்கப்படுமாயின், இந்த நம்பிக்கை வீண்போய் விடும். அவ்வாறு எதுவும் நடந்து விடுமோ என்பதே, சிறுபான்மையின சமூக அரசியலில், கடந்த சில தினங்களாக அங்கலாய்க்கப்படும் விடயமாக இருக்கின்றது.

புதிய அரசாங்கம், பல்வேறு காரியங்களைச் செய்து முடிப்பதற்கு இந்தப் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தும். மாகாண சபை முறைமையில் திருத்தம், அரசமைப்பின் திருத்தங்களை மீளத் திருத்துதல், தேர்தல் முறைமையில் மாற்றம் எனப் பல திட்டங்கள், பெரமுன அரசாங்கத்திடம் இருக்கின்றன. அதற்கேற்றாற்போல், எல்லாம் கட்டமைக்கப்பட்டு வருவதையும் கூர்ந்து நோக்குவோரால் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

பெரும்பான்மையின மக்களிடம் இருக்கின்ற சிறிதளவு ஆதரவையும் இழந்து விடக் கூடாது என்பதற்காக (ஐ.தே.க, சு.க, ஐ.ம.சக்தி போன்ற) மற்றைய பெரும்பான்மையினக் கட்சிகளும் ஆளும்தரப்பின் நகர்வுகளைப் பெரிதாக எதிர்க்காது. எனவே, ‘அப்படி’ எதுவும் நடந்தால், சிறுபான்மை முஸ்லிம்களும் தமிழர்களுமே, அதற்குள் கிடந்து உழல வேண்டிய நிலை ஏற்படும்.

அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு தமிழ் எம்.பிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சும் இருவருக்கு இராஜாங்க அமைச்சுகளும் வழங்கப்பட்டுள்ளன. முஸ்லிம் தரப்பில், ஜனாதிபதி சட்டத்தரணியும் அண்மைக்காலமாகப் பெரமுனவின் வெற்றிக்கு உழைத்தவருமான அலி சப்ரிக்கு தேசியபட்டியல் வழங்கி, நிதி அமைச்சராகவும் அரசாங்கம் நியமித்துள்ளது. பிக்குகளின் அழுத்தத்தையும் மீறி, ஜனாதிபதி இப்பதவிக்கு அவரை நியமித்துள்ளார்.

இருப்பினும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில், அமைச்சு கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டவரும் ராஜபக்‌ஷக்களுக்கு மிக நெருக்கமாக இருந்தவருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வுக்கு எந்த அமைச்சும் கிடைக்கவில்லை. இது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அத்துடன், இராஜாங்க அமைச்சராகவும் எந்த முஸ்லிம் எம்.பியும் நியமிக்கப்படவில்லை. ஆயினும், கடந்த முறை, ஒரு முஸ்லிமைக் கூட அமைச்சரவைக்கு நியமிக்காத ஆளும் கட்சி, இம்முறை ஒருவரையாவது நியமித்துள்ளது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

பிரதான முஸ்லிம் கட்சிகளான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவை, தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் பலத்தை, ஏற்கெனவே இழந்து விட்டிருக்கின்ற நிலையில், மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு விசுவாசமாக இருந்த தலைவரான அதாவுல்லாஹ்வுக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றமை, முஸ்லிம்களுக்கு இருந்த ஒரேயொரு நம்பிக்கையை வீணாக்கியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

எவ்வாறிருப்பினும், ஆளும் கட்சி நினைக்கின்ற எந்தவொரு தீர்மானத்தையும் சட்டமூலத்தையும் திருத்தத்தையும் நாடாளுமன்றில் இலகுவாக நிறைவேற்றி விடுவார்கள். அமைச்சரவையில் இருக்கின்ற ஒரு சில சிறுபான்மையின அமைச்சர்களாலோ, ஆளும் தரப்பில் உள்ள ஏனைய தமிழ், முஸ்லிம் எம்.பிக்களாலோ எதிர்த்துப் பேச முடியாது.

கடந்த பல அரசாங்கங்களில், அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இருந்தபோது, முஸ்லிம்களுக்கு எதிரான விடயங்களுக்காகக் குரல் கொடுப்பதற்குத் தயங்கிய முஸ்லிம் அரசியல்வாதிகள், இந்த ஆட்சியில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பேசுவார்கள் என்றோ, அவ்வாறு பேசினாலும் எதாவது நடக்கும் என்றோ யாரும் எதிர்பார்க்கத் தேவையில்லை.

இன்று, முஸ்லிம் சமூகம் இவ்வாறான ஒரு நிலைக்கு வந்திருக்கின்றது என்றால், அதற்கு அவர்கள் எடுத்த அரசியல் நிலைப்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றன. தமிழ் அரசியல் தலைமைகள், கொஞ்சம் வித்தியாசமாகச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும், அது வெற்றியைத் தரும் என்பது நிச்சயமில்லை.

எனவே, சிறுபான்மையினச் சமூகங்கள், எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு, முற்றாக இணக்க அரசியலுக்குள் உச்சக்கட்ட சகிப்புத்தன்மையுடன் சங்கமமாக வேண்டிய நிலை வரலாம். குறிப்பாக, முஸ்லிம் தலைவர்கள் இதைச் செய்வதில் தவறிழைப்பார்களாயின், முஸ்லிம் கட்சிகளை மெல்ல மெல்லக் கைவிட்டு, பெருந்தேசியக் கட்சிகளை நோக்கி, மக்கள் நகர்வதற்கான சூழல் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், தமிழ் மக்கள் அவ்விதம் நகர மாட்டார்கள்.

அதற்காக யாரும் நம்பிக்கை இழக்கவோ, அச்சப்பட வேண்டிய அவசியமோ இல்லை. ஏனெனில், ‘நமக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கின்றதுதானே; எல்லாம் கிடைத்து விட்டதுதானே’ என்ற எண்ணத்தில், பன்னெடுங்காலம் ஆட்சி செய்யும் நோக்கோடு, ஆட்சியாளர்கள் சிறுபான்மைச் சமூகங்களை அரவணைத்துப் பயணிக்கும் மாறுபட்ட அரசியலைச் செய்வதற்கும் வாய்ப்புள்ளது.

எனவே, மிகக் கவனமாகவும் பக்குவமாகவும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒவ்வொரு காலடியையும் எடுத்து வைக்க வேண்டியதே இன்றைய தேவையாகும்.

## கடிதங்கள்

### குடிநீரின்றி அவதி

பலாங்கொடை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விக்கிலி - எல்தோர தோட்ட மக்கள், குடிநீர் இல்லாமல் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

எல்தோர தோட்டத்தில், சுமார் 200க்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள், தோட்டத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் பள்ளத்துக்குச் சென்று, அங்குள்ள கிணற்றில் இருந்தே அன்றாடப் பாவனைக்குத் தேவையான குடிநீரை எடுத்து வருகிறார்கள்.

குறித்த கிணற்றில், சுமார் பத்தடி உயரத்துக்கு மாத்திரமே நீர் அன்றாடம் நிரம்புவதால், அத்தோட்டத்தில் பத்து வரையிலான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பாவனைக்கு நீரை எடுத்தவுடன், அத்தோட்டத்தில் மீதமுள்ளவர்களுக்கு நீர் இல்லாமல் போகின்றது.

மீதமுள்ளவர்கள், குடிநீருக்காக சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் சென்றே, நீரைக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செல்வதற்காக, ஓட்டோக்களுக்கு 200 - 300 ரூபாயை செலுத்த வேண்டும்

2019இல், 10 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டமொன்று ஆரம்பித்து, அப்பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்கி வைக்கப்பட்ட போதிலும், அது இரண்டு மாதங்களுக்குப் பின்னர் இல்லாமல் போயுள்ளது.

க. மஹிந்த குமார், பலாங்கொடை



முதல் அரையாண்டில்

# நாட்டின் ஏற்றுமதி 26.4 சதவீதத்தால் சரிவு

**ஆடை ஏற்றுமதி 20 சதவீதம், இறப்பர் உற்பத்திகள் 16 சதவீதம்: சரிவு ஆனால், தேயிலை 1.6 சதவீதம் உயர்வு**

**இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக, இறக்குமதிகள் 24.6 சதவீதத்தால் குறைந்து, 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவு**

நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டில், இலங்கையின் ஏற்றுமதி 26.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில், பதிவாகியிருந்த 5.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடன் ஒப்பிடுகையில், நடப்பு ஆண்டில், 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியிருந்தது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக, இந்தப் பின்னடைவை எதிர்நோக்கியிருந்ததாக, இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மே மாத ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில், ஜூன் மாத ஏற்றுமதிகளில் அதிகரிப்பு பதிவாகியிருந்தது.

கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முடக்க நிலை, ஜூன் மாதத்தில் தளர்த்தப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, உள்ளகப் பொருளாதாரச் செயற்பாடுகள் படிப்படியாக வழமைக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தன.

வணிகச் சரக்குகள் ஏற்றுமதிகளில் பெருமளவு மீட்சியை அவதானிக்க முடிந்தது. ஜூன் மாதத்தில் 894 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்திருந்தது. 2020 மே மாதத்தில், இந்தப் பெறுமதி 587 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. ஆடை உற்பத்தி, ஏற்றுமதி, 2020 மே மாதத்திலிருந்து ஜூன் மாத அதிகரிப்புக்கு உயர் பங்களிப்பை வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து இறப்பர் உற்பத்திகள், உணவு பானங்கள், புகையிலைத் தயாரிப்புகள், கடலுணவுகள், வாசனைத்திரவியங்கள் போன்றனவும் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், 2019 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், வணிகச் சரக்குகள் ஏற்றுமதிகளினூடான வருமானம், 2020 ஜூன் மாதத்தில் 17.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. வருடாந்த அடிப்படையில் ஒப்பிடுகையில், ஆடைகள் ஏற்றுமதியினூடான வருமான வீழ்ச்சி உயர் பங்களிப்பைப் பதிவு செய்திருந்தது.

போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலியப் பொருள்கள், மாணிக்கக்கற்கள், ஆபரணங்கள், விலங்கு தீன் ஏற்றுமதிகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தன.

சத்திரசிகிச்சை, இதர கையுறைகள் ஏற்றுமதி அதிகரிப்பை பதிவு செய்திருந்த போதிலும், இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது. குறிப்பாக, டயர்கள் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் உணவு, பானங்கள், புகையிலை தயாரிப்புகள் (திரவ தேங்காய்ப் பால், தேங்காய் கிறீம், உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை), பிளாஸ்டிக், அதைச் சார்ந்த உற்பத்திகள் (பிளாஸ்டிக்கானாலான ஆடைகள்), இரசாயனப் பொருள்கள் (செயற்படுத்தப்பட்ட காபன்) போன்றவற்றின் ஏற்றுமதி 2020 ஜூன் மாதத்தில் அதிகரித்திருந்தன.

விவசாய ஏற்றுமதிகளின் வருமானம், குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தன.



குறிப்பாக, தேயிலை ஏற்றுமதிகள், பத்து மாதங்கள் கடந்து, 2020 ஜூன் மாதத்தில் உயர் ஏற்றுமதிப் பெறுமதியைப் பதிவு செய்திருந்தது.

இதர விவசாய உற்பத்திகளான பழங்கள், வெற்றிலை ஏற்றுமதியும், உயர் வருமதியைப் பதிவு செய்திருந்தன. கறுவா, மிளகு ஏற்றுமதி அதிகரித்திருந்ததுடன், தெங்கு உற்பத்திப் பொருள்களின் சராசரி ஏற்றுமதி விலை அதிகரிப்பால், தேங்காய் ஏற்றுமதி வருமானமும் அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது.

2020 ஜூன் மாதத்தில் தாதுப்பொருள்களின் ஏற்றுமதி வருமானமும், அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. இலங்கை ரூபாயின் பெறுமதி, 2020 ஏப்ரல் மாத நடுப்பகுதி முதல், மீட்சியைப் பதிவு செய்ய ஆரம்பித்திருந்த நிலையில், 2020 ஜூன் மாதம் வரையிலும், இந்த நிலையைப் பேணியிருந்தது. எவ்வாறாயினும், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி, 2020 ஒகஸ்ட் 14ஆம் திகதி வரையில் 0.6 வீத வீழ்ச்சியை நடப்பு ஆண்டில் பதிவு செய்துள்ளது.

ஒதுக்கங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில், உள்ளக வெளிநாட்டு நாணயப் பரிமாற்றுச் சந்தையில், இலங்கை மத்திய வங்கி தலையீட்டைக் கொண்டிருந்தது. யூரோ, ஸ்டேர்லிங் பவுண், ஜப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர்கள் ஆகிய வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையிலும், இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனாலும், 2020 ஒகஸ்ட் 14ஆம் திகதி வரையில் இந்திய ரூபாயுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது.

## பங்குச் சந்தை

CSE COLOMBO STOCK EXCHANGE

2020.08.17

| அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் | S&P SL20 விலைச் சுட்டெண் |
|---|---|
| 5,251.61 | 2,316.99 |

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.17

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| எஸ்.எம்.பி லீசிங் (சாதாரண) | 0.20 | 0.30 | 0.10 |
| டெஸ் ஆக்ரோ | 0.40 | 0.50 | 0.10 |
| எஸ்.எம்.பி லீசிங் | 0.40 | 0.50 | 0.10 |
| செரண்டிப் ஹோட்டல் (சாதாரண) | 10.10 | 11.40 | 1.30 |
| எல்பிட்டிய | 21.10 | 23.70 | 2.60 |
| ஃபர்ஸ்ட் கெப்பிட்டல் | 57.70 | 61.60 | 3.90 |
| டிமோ | 281.30 | 298.80 | 17.50 |
| ஹோட்டல்ஸ் கோப். | 10.00 | 10.50 | 0.50 |
| இபி க்ரீஸி | 1049.10 | 1100.00 | 50.90 |
| கண்டி ஹோட்டல்ஸ் | 4.40 | 4.60 | 0.20 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| புளூ டயமன்ட்ஸ் (சாதாரண) | 0.30 | 0.20 | (0.10) |
| அமானா லைப் | 9.90 | 7.70 | (2.20) |
| பேருவளை ரிசோட்ஸ் | 0.80 | 0.70 | (0.10) |
| நேஷன் லங்கா | 0.80 | 0.70 | (0.10) |
| ஒடோட்றொம்ப் | 75.70 | 70.80 | (4.90) |
| செய்ரா கேபிள் | 3.50 | 3.30 | (0.20) |
| கெமெனெக்ஸ் | 55.40 | 52.30 | (3.10) |
| கார்டியன் கெப்பிட்டல் | 25.40 | 24.20 | (1.20) |
| சிட்றஸ் லெய்ஷர் | 10.60 | 10.10 | (0.50) |
| மேச்சன்ட் பேங்க் | 7.60 | 7.30 | (0.30) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**TT RATES**
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 17 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 128.60 | 134.86 |
| Canadian Dollar | 135.49 | 141.07 |
| Chinese Yuan (Renminbi) | 25.56 | 27.24 |
| Euro | 213.37 | 211.01 |
| Japanese Yen | 1.68 | 1.75 |
| Singapore Dollar | 131.18 | 136.43 |
| Sterling Pound | 236.03 | 244.06 |
| Swiss Franc | 197.41 | 205.66 |
| US Dollar | 181.05 | 185.45 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 484.97 |
| Kuwait | Kuwait Dinar | 597.72 |
| Oman | Oman Rial | 474.85 |
| Qatar | Qatar Riyal | 50.20 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 48.74 |
| UAE | UAE Dirham | 49.77 |

**சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை**

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரென்ட் | 44.80 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 44.62 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 46.90 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 47.97 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 43.29 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2020 ஒகஸ்ட் 17 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்**

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

# செலான் மேர்ச்சன்ட் போர்டல் மூலம் கட்டண வசதி

தொடர்பு இல்லாத கொடுப்பனவுகளை எளிதாக்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, செலான் வங்கி இன்போர்மடிக்ஸ் இன்ஸ்டிடியுட் ஒஃப் டெக்னொலஜி - Informatics Institute of Technology (IIT) நிறுவனத்தின் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் முழு அளவையும் செலான் மேர்ச்சன்ட் போர்டல் ஊடாக நிர்வகிக்க முன்வந்துள்ளது. இது, டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்பான, வசதியான தெரிவை வழங்கும் ஒரு முழுமையான டிஜிட்டல் கட்டணத் தளமாகும்.

நாணயங்கள், காகிதப் பணம் கையாள்வதில் ஏற்படும் உடல்நல அபாயங்கள் குறித்து, நுகர்வோர் கரிசனை கொண்டுள்ளதால், தற்போதைய சூழலில், தொடர்பு இல்லாத கொடுப்பனவுகளின் அவசியம் மிக முக்கியமானது. IIT வலைத்தளத்தின் மூலம் ஒரே கிளிக்கில் பணமில்லா கொடுப்பனவுகளைச் செய்வதற்கான வாய்ப்பை, செலான் மேர்ச்சன்ட் போர்டல் பயனர்களுக்கு வழங்கும்.

இவ்வணிகத் தளத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், வணிகர்கள் தங்கள் கொடுப்பனவுகளையும் செலவுகள் வரலாற்றையும் கண்காணித்து, வசதியை மேம்படுத்தவதில் இது உதவுகிறது. இதில் மற்றொரு முக்கிய அம்சம், கட்டண ஆரம்பம், தகவல்தொடர்பு டிஜிட்டல் மயமாக்கல் ஆகும். தளத்தின் பயனர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பு, தளம் கட்டண இணைப்புகளைப் பகிரும்போது அல்லது

> **இன்றைய சமுதாயத்தின் இலகுவாகவும், சிநேகபூர்வமாகவும் விரைவாகவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் தேவையைப் புரிந்துகொண்டு, பெரிய, சிறிய அளவிலான உள்ளூர் வணிகங்களின் சேவை சிறப்பையும் நுகர்வோர் வசதியையும் உறுதி செய்வதற்காக பல முக்கிய துறைகளில் அதன் வணிக நுழைவாயில் சேவைகள், ஆதரவு அமைப்பை இயக்க செலான் வங்கி திட்டமிட்டுள்ளது**

பல்வேறு தகவல்தொடர்பு வழிமுறைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டல்களைப் பகிரும்போது எளிதாக அணுகுவதை உறுதி செய்கிறது.

IITக்கு வழங்கப்படும் இந்தச் சேவைகளின் ஊடாக, புதுமையான டிஜிட்டல் மாற்றங்கள் மூலம் வாடிக்கையாளர் வசதிக்காக கவனம் செலுத்தும் சூழலை வளர்ப்பதை செலான் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது - இது மாணவர்கள், ஆசிரியர்கள், அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற முக்கிய பங்குதாரர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

இன்றைய சமுதாயத்தின் இலகுவாகவும், சிநேகபூர்வமாகவும் விரைவாகவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் தேவையைப் புரிந்துகொண்டு, பெரிய, சிறிய அளவிலான உள்ளூர் வணிகங்களின் சேவை சிறப்பையும் நுகர்வோர் வசதியையும் உறுதி செய்வதற்காக பல முக்கிய துறைகளில் அதன் வணிக நுழைவாயில் சேவைகள், ஆதரவு அமைப்பை இயக்க செலான் வங்கி திட்டமிட்டுள்ளது.

# அமானா வங்கியிடமிருந்து Digital Self Banking Zone

அமானா வங்கி, தனது Self Banking Zoneஐ, தெஹிவளை கிளையில் அறிமுகம் செய்துள்ளது. தமது வாடிக்கையாளர்களுக்கு, சௌகரியமான சுய-வங்கியியல் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், இந்த அறிமுகத்தை மேற்கொண்டுள்ளது.




வாடிக்கையாளர்களுக்கு தினசரி வங்கிசார் கொடுக்கல்-வாங்கல்களான பண மீளப் பெறுகைகள், பண வைப்புகள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் போன்றவற்றை இந்த Self Banking Zone ஊடாக இலகுவாக மேற்கொள்ள முடியும் என்பதுடன், புதிதாக நிறுவப்பட்டுள்ள Self Banking Kiosk ஊடாக, மேலும் பல கொடுக்கல் வாங்கல்களை டிஜிட்டல் முறையில் மேற்கொள்ள முடியும். Self Banking Kioskஇனால் வாடிக்கையாளர்களுக்கு இணைய வங்கிச்சேவைகள், e-அறிக்கைகள், SMS அலேர்ட்ஸ் போன்றவற்றுக்கு பதிவு செய்துகொள்ள முடியும் என்பதுடன், டெபிட் அட்டைக்கு விண்ணப்பிக்கவும் முடியும். மேலும், டெபிட் அட்டைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளான புதிய கணக்குகளை அட்டையில் இணைத்தல், PIN குறியீட்டை மாற்றிக் கொள்ளல், எல்லைப் பெறுமதிகளை மேம்படுத்திக் கொள்ளல் போன்றவற்றையும் மேற்கொள்ள முடியும்.

# யூனியன் அஷ்யூரன்ஸின் SISUMAGA+ தொலைக்காட்சி விளம்பரத்துக்கு வரவேற்பு

யூனியன் அஷ்யூரன்ஸின், Sisumaga+ தொலைக்காட்சி விளம்பரம் அண்மையில் தொலைக்காட்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. கமல் அத்தரஆரச்சி, ஷெயொலி ஜயரத்ன, நெத்மி ஹெட்டியாரச்சி, சந்தலி பத்திரனகே ஆகியோரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த விளம்பரம், 2 நிமிடங்களுக்குப் படமாக்கப்பட்டிருந்தது.

பார்வைத்திறன் குறைந்த தந்தை ஒருவருக்கும் அவரின் மகளுக்குமிடையிலான உரையாடலை பிரதிபலிப்பதாக, இந்த விளம்பரம் அமைந்திருந்தது. இளம் வயதுமுதல் பட்டதாரியாகும் வரை, அவள் கடந்து வந்த பாதை, அதற்காக அவளின் தந்தையின் தியாகங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. உணர்வுபூர்வமானமுறையில் தயாரிக்கப்பட்டிருந்த இந்த விளம்பரம், வாழ்க்கையில் காணப்படும் உறுதியற்ற தருணங்களை



உணர்த்துவதாக அமைந்துள்ளது. குழந்தையின் எதிர்காலத்துக்கான பெற்றோரின் தியாகம், யூனியன் அஷ்யூரன்ஸ் கொண்டுள்ள நெறிமுறைகளும் இந்த விளம்பரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விளம்பரத்தின் தொனிப்பொருள், தந்தையின் தியாகத்தினூடாகப் பிள்ளைகளுக்கு பிரகாசமான எதிர்காலம் தொடர்பான தோற்றத்தை வழங்குவதாக அமைந்திருந்தது. தமது பிள்ளைகளுக்குச் சிறந்ததை பெற்றுக் கொடுப்பதற்கு, பெற்றோர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை உணர்த்தியிருந்தது. பார்வை மூலம் கல்வியினூடாகப் பிள்ளை பெற்றுக்கொண்ட அறிவுப் பயணம் குறிக்கப்படுகின்றது. தந்தை மற்றும் மகள் ஆகியோர் ஒன்றிணைந்து எய்திய சாதனைகள், இறுதிக்காட்சிகளில் குறிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையில் எழும் சவால்களை முறியடித்து, மகளின் பட்டமளிப்புடன் உயர்ந்த நிலையை எய்தியதைத் தொடர்ந்து, மகளும் தந்தையும் பெருமைக்குரிய தருணத்தைப்பகிர்ந்து கொள்கின்றனர்.

இன்றைய உலகில் காணப்படும் உறுதியற்ற நிலை காரணமாக, எதிர்காலம் தொடர்பாக புதிய வழியில் திட்டமிட வேண்டியுள்ள நிலையில், ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் உயர் கல்விக்கான செலவை பெற்றுக் கொள்ளும் சவாலுக்கு முகங்கொடுக்கின்றனர். Sisumaga+ ஊடாக பிரத்தியேகமாக,பாதுகாப்பு அடிப்படையிலான கல்வித் திட்டத்தை வடிவமைத்து, அடுத்த தலைமுறையின் எதிர்காலக் கனவுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது.



பெண்கள்

# விதிகளை மாற்றி எழுதட்டும்

**அமெரிக்க துணை ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸ் என்ற பெண் போட்டியிடுகின்றார். இந்தப் பெண் இந்தியத் தாய்க்குப் பிறந்தார் என்று சொல்லிக் கொண்டு சமூக வலைத்தளங்களில் விவாதங்கள் நடைபெறுகின்றன.**

பெண் அடிமைத்துவக் கொடி பறக்கும் எமது சமூகத்தில் வாழும் ஆண்கள், கமலா ஹாரிஸ் வெற்றி பெற வேண்டும் என்று பாராட்டியும் போற்றியும் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு, நமது நாட்டுப் பெண்கள், தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்கியபோது, கேலியும் கிண்டலும் செய்த அதே சமூகம்தான், கமலா ஹாரிஸை இன்று கொண்டாடுகின்றது.

கமலா ஹாரிஸ் யார் என்றால், அவரது தாயார் அமெரிக்கா சென்று, மடிசார் புடவை கட்டிக்கொண்டு, பூஜை புனஸ்காரம் என்று இல்லாமல், கறுப்பினக் கலாசாரத்துக்குத் தன்னை மாற்றிக் கொண்டு, தன் கணவரைப் 'பஞ்சக்கச்சம் கட்டுய்யா' என்று, கலாசார மிரட்டல் விடுக்காமல், அவருடன் இணைந்து சிவில் உரிமை இயக்கங்களில் பங்குகொண்டார்; போராடினார்.

தன் இரண்டு மகள்களையும் கறுப்பினக் கலாசாரத்தின் படியே வளர்த்தார், அவர்களைக் கறுப்பினப் பெண்களாகவே (BLACK GIRLS) வளர்த்தார். அதன் வழியே தான், அரசியல் உரிமை பெறும் பயணத்தில் கமலா ஹாரிஸ் சட்டத்தரணியாக மாறினார்; அங்கிருந்து செனட்டர் என்கிற படிகளில் ஏறினார்.

நமது கேள்வி எல்லாம் ஒன்றே! இதே கமலாவின் தாய், தமிழ்நாடு, சென்னையில் இருந்து கொண்டு, ஒரு கறுப்பினத்தவரை அல்லது ஒரு தலித் இளைஞரைக் காதலித்திருந்தால் என்ன நடந்திருக்கும்? கமலா ஹாரிஸின் தாய், ஆணவக் கொலை செய்யப்பட்டிருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்நாட்டின் பிரபல கர்நாடக இசைப் பாடகர் சுதா ரகுநாதன். இவரது மகள் மாளவிகாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட



> **வெளிநாட்டுப் பெண்ணைக் கொண்டாடும் பச்சோந்திகள், தம் சொந்தப் பெண்களை சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் வாழ அனுமதிக்க வேண்டும்**

நிலையில், அவர் சந்தித்த நெருக்கடிகளைக் கொஞ்சம் நினைவு கூர்ந்து பாருங்கள். அவர் ஏன் மிரட்டப்பட்டார், ஒரே காரணம் தான்! அவரது மகள் மாளவிகா காதலித்தது, ஆபிரிக்கக் கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஒருவரை. இதைக் காரணமாகக் காட்டி, சுதா ரகுநாதனின் இசையில், அவர் செய்து வரும் கலைப்பணியில் கைவைக்க நினைத்தவர்கள், மிரட்டவும் செய்தார்கள்; மிரட்டியவர்கள் யார்? இது கற்காலத்தில் அல்ல. கடந்த 2019ஆம் ஆண்டில் நடந்தது.

சுதா ரகுநாதன், தன் மகளை கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த ஆபிரிக்கக் கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மைக்கேலுக்கு, கல்யாணம் செய்ததை ஒட்டி, அவரை யார் மிரட்டினார்களோ, அதே கூட்டம் இன்று, கமலா ஹாரிஸ்!! கமலா ஹாரிஸ்!!! என்று கோஷம் போடுகின்றது.

எப்பொழுதுமே, தந்தைவழி (paternal) உறவு முறையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, பெண்களை அடிமைச் சூத்திரர்கள் போல் நடத்தும் இந்தச் சமூகம், எப்படி ஒரே இரவில் தாய்வழி (maternal) உறவுகளை எல்லாம் மதிக்கிற சமூகமாக, அதைக் கொண்டாடுகிற சமூகமாக மாறியது?

நம் சமூகத்தில், பெண்கள் இன்று அடைந்திருக்கும் மரியாதை என்பது, அவர்கள் கல்வி கற்று, உத்தியோகங்களை நோக்கிச் சென்று, பெரும் பதவிகளை அலங்கரித்த பின்னர் வந்தது. பெண்களை, வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகப் பாவித்த இந்தச் சமூகத்தின் விதிகளுக்கு எதிராக, பெண்கள் கல்வி கற்க, வாக்களிக்க, வேலைக்குச் செல்ல, அரசியலில் பங்கெடுக்க, விமானிகளாகப் பறக்க, சொத்தில் பங்கு எனும் நிலையை அடைய யார் குரல் கொடுத்தார்கள், யார் போராடினார்கள்? பெண் விடுதலையை யார் சாத்தியமாக்கினார்கள்?

கமலா ஹாரிஸின் தாய் இந்த இழிவுகளில் இருந்தெல்லாம் விடுவித்துக் கொண்டு, தன்னை இந்தக் கலாசாரத்தில் இருந்தும் முற்றிலும் அந்நியப்படுத்திக் கொண்டு, தன் மகள்களை ஒரு புதிய உலகத்துக்குத் தயார் செய்தார்; அவர்களைப் பறக்க அனுமதித்தார்.

வெளிநாட்டுப் பெண்ணைக் கொண்டாடும் பச்சோந்திகள், தம் சொந்தப் பெண்களை சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் வாழ அனுமதிக்க வேண்டும். அது நடந்தால், நமக்குள்ளிருந்தும் பல கமலா ஹாரிஸ்கள் உருவாகுவார்கள்.



## உலக மகளிர் புணர்ச்சி தினம்


ஒகஸ்ட் எட்டாம் திகதி, உலக மகளிர் புணர்ச்சி தினம் (World female orgasm day) 2007ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட, இந்தத் தினம் பற்றி நம்மில் பலருக்குத் தெரியாது.

ஏன், இந்த ஒரு நாள் கொண்டாடப்படுகிறது? ஆண்களுக்கு, ஏன் அப்படி ஒரு நாள் இல்லை என்ற கேள்விகளுக்கு, ஏன் சுதந்திர தினம் கொண்டாடுகிறோம் என்ற கேள்விக்கு என்ன பதிலோ, அதேதான் இதற்கும் பதிலாகும்.

உலகளவில் பெண்ணானவள் மதம், இன, மொழி, நாடுகளைத் தாண்டி இரண்டாம் பாலினமாக மட்டுமே கருதப்படுகிறாள்.

உடலாலும் உணர்வாலும் ஆணும் பெண்ணும் வேறுபட்டவர்கள். ஓர் ஆண், பெண்ணின் உடலை, அழகைக் கண்டதும் உணர்ச்சி வசப்படுவதற்கு இணையாக, ஒரு பெண், ஓர் ஆணின் அங்க அவயவங்களால் உணர்ச்சி வசப்படுவதில்லை. அவளின் மனதைத் தாண்டித்தான், உணர்வைத் தொட முடியும்.

அவசர காலத்தில்,



அவசர கதியாக வாழும் மனிதனுக்கு, இதற்கெல்லாம் நேரம் எங்கே என்று அவசர கதியாக, இருட்டறையில் இல்லத்தரசியோடு இணைந்து இயங்கிவிட்டு, அவன் உணர்வு வெளிப்பட்டதும் அசந்து விடுகிறான்.

நீங்கள் எத்தனை மணி நேரம், எத்தனை காலங்கள் அவளோடு இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தாண்டி, அவளின் சந்தோசத்தை எந்தளவுக்கு நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே, அவளின் பூரணத்துவம் இருக்கும் என்பதைச் சிந்தித்து, அவளை ஒரு மனுசியாக்கக் கோரும் தினம் தான் இதுவாகும்.

## சுட்டிப் பெண்களின் சாதனை

ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 18 வயது மாணவியான சுமையா ஃபரூக்கியும் அவரது ஆறு தோழிகளும் இணைந்து, கொரோனா வைரஸ் நோயாளிகளுக்குப் பொருத்தக்கூடிய மலிவு விலை வென்டிலேட்டர் கருவி ஒன்றை வடிவமைத்துள்ளனர். 20,000 டொலர்கள் சந்தை விலை கொண்ட வென்டிலேட்டர் கருவியை, இந்தப் பெண்கள் 700 டொலர் செலவில் உருவாக்கியுள்ளனர்.

கல்வியே மறுக்கப்படும் சூழலில், அந்நாட்டின் சுட்டிப் பெண்கள் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்.



புதுவாசல் – 13

## குரலற்றவர்களின் குரல்

ஸர்மிளா ஸெய்யித்
sharmilaseyyid@yahoo.com



பண்டாரவளைக்கு இடம்பெயர்ந்து, இது நான்காவது மாதம். 'கொரோனா ஊரடங்கை' கொழும்பில் தளர்த்திய மறுவாரமே, கொழும்பிலிருந்து, மூட்டை முடிச்சுகளோடு இங்கே குடியேறியாயிற்று. இந்த இடப்பெயர்வு திட்டமிட்டதுதான்.

2018ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து, மலையகப் பிரதேசங்களிலுள்ள சில பெண்கள் குழுக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிறேன். இந்தக் காலத்தில் ஒரு விடயத்தை ஆழமாக உணர்ந்தேன். கொழும்பிலிருந்தோ, வேறு பிரதேசங்களிலிருந்தோ, மலையக மக்களுக்கு என்ற போர்வையில் எந்த வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. அவர்களது பிரச்சினைகளும் தேவைகளும் இலங்கைத் தீவிலுள்ள ஏனைய மக்களிலிருந்து முற்றிலும் வேறு திசையில் இருக்கிறது. வரலாற்றை அறிந்து கொண்டால் மட்டும், இதற்குள் இறங்க முடியாது; வலிகளையும் உணர்ந்தால் தான் முடியும் என்பதே அது.

இறுதியாக, 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தோட்டப் பெண்களுக்கென்று சுய எழுச்சி தொடர்பான பயிற்சி நெறியை ஏற்பாடு செய்திருந்தோம். பண்டாரவளையில் உள்ள சமூக மாற்றுக் கல்வி நிலையமொன்றில் பயிலரங்கு. 30 பெண்கள் பயனாளிகளாகத் தெரிவாகியிருந்தார்கள். காலை ஒன்பது மணிக்கு பயிற்சி ஆரம்பம். நாங்கள் எட்டு மணிக்கே, காலை உணவை முடித்துக் கொண்டு தயாராகிவிட்டோம்.

ஆடம்பரமான ஏற்பாடுகள் எதுவுமில்லை. எளிமையான இடமும் முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. மண்டபத்தில் பாய்களை விரித்துப் பூக்களால் மத்திய பகுதியை அலங்கரித்திருந்தோம். பாய்களில் வட்ட வடிவமாக அமர்ந்து கொள்ளத்தக்கதான அந்த ஏற்பாடு எளிமையாகவும் அழகாகவும் இருந்தது. சுற்றிலும் இயற்கையான சூழல்; திரும்பும் திசையெல்லாம் பசுமை; வெதுவெதுப்பான வானிலை என்று அனைத்தும் சாலப் பொருந்திப் போயிருக்க, நாங்கள் எல்லோரும் உற்சாகமாக வழியையே பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களோடு ஒத்துழைத்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்ய உதவிய பெண் இதே பகுதியைச் சேர்ந்தவர். பெண்களோடு பணிகளில் ஈடுபடுகிறவர். தோட்டப்புறங்களில் மிக அறியப்பட்டவர். நேரம் செல்லச் செல்ல அவர் முகத்தில் ஏமாற்றம். கைகளைப் பிசைந்து கொண்டு, அடிக்கடி எங்களிடம் "மன்னிக்கவும்" என்றபடியிருந்தார். நாங்களும் "பரவாயில்லை" என்றே சொன்னபடிருந்தோம். தொலைபேசியில் சில பெண்களைச் சாடவும் செய்தார்.

பத்து மணியாகியும் வெறும் நான்கே நான்கு பெண்களைத்தான் மண்டபத்தில் காணமுடிந்தது. ஒவ்வொரு பெண்ணாகத் அலைபேசியதில் "வந்து கொண்டிருக்கிறோம்" என்பதுதான் பதிலாக இருந்தது.

நாங்கள் முதல் நாளே, கொழும்பிலிருந்து புறப்பட்டிருந்தோம். இங்கிருந்து கொண்டே, அவர்களால் உரிய நேரத்துக்கு வரவில்லையே என்று அங்கலாய்க்க முடியவில்லை. இதற்கு முன்பும் ஹட்டன், ஹப்புத்தளையில் பயிலரங்குகள் நடத்தியபோது, இலங்கை மக்களுக்கே உரிய 'நேரந்தவறும்' நாகரிகம் அங்கும் இருந்தது. ஆனால், இது அந்த நாகரிக 'நேரந்தவறுகை' இல்லை. பயிலரங்கை முடிப்பதைப் பற்றி, நீண்ட விவாதங்கள் நடப்பது வழமை. ஒவ்வொருவரும் வீடு போய் சேரவேண்டும்; பஸ்களைத் தவறவிட்டுவிடக்கூடாது என்ற பரபரப்புடன் அவர்களால் கவனம் குவிக்க முடிகிறதா என்று தோன்றும்.

எப்படியோ, பங்குபற்றுநர்கள் வந்து சேர பதினொன்றே முக்கால் மணியானது. ஒரு வழியாகப் பயிற்சி தொடங்கியது. முழு ஈடுபாட்டோடு பங்குபற்றினார்கள். பெரும்பாலும் அவர்களைப் பேசவிட்டுச் செவிமடுத்தோம். "எங்களுக்கும் நிறைய விசயங்களில் ஆர்வம் இருக்குதான்; இந்தச் சூழல் தொழிலாளியாகவே எங்களைக் கட்டுப்போட்டிருக்கிறதே, என்ன செய்ய" என்று ஒரு பெண் சொன்னபோது, மெய்யாகவே வலித்தது. ஆணோ பெண்ணோ, வாய்ப்புகள் தான், வாழ்வை அடுத்த நிலைக்கு நகர்த்துவது. வாய்ப்புகள் முற்றிலும் மறுக்கப்பட்ட ஒரு சூழலில், வாழ்வின் அடுத்த நிலை என்பது கேள்விக்குறியாகிறது.

1.30 க்கு மதிய உணவு. ஏலவே நேரம் கடந்துவிட்டதால் அரை மணி நேரத்துக்குள் உணவருந்திவிட்டுத் தொடங்கலாம் என்றோம். ஆனால், உணவருந்திய கையோடு அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். சிலர் பள்ளியில் இருந்து பிள்ளைகள் வந்துவிடுவார்கள் என்றார்கள்; சிலர் கடைசி பஸ்ஸைத் தவறவிட்டால் வீடு போய்ச் சேரமுடியாது என்றார்கள்.

இவை எதுவும் விசித்திரம் இல்லை. மனிதர்களை இழுத்துப் பிடித்து வைத்திருக்கும் வகையில் தான், இங்கு சூழல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சுய பிரக்ஞைகளுக்கான எல்லா வாசல்களும் மூடப்பட்ட ஒரு சூழல். உணவு, உறையுள், சுகாதாரம், போக்குவரத்து என்று எல்லாமே போதாமை கொண்ட சூழலில் உள்ளவர்களிடம் 'மேட்டுக்குடி என்ஜியோ' வியாபாரம் வேலைக்கு உதவாது; மலையகத்தில் பெருமளவு என்ஜியோக்கள் ஏன் வேலை செய்வதில்லை என்பதற்கும் இதுதான் காரணம்.

இங்கு வந்த இந்த மூன்று மாதங்களில், செய்வதற்குப் பல வேலைகள். குடியேறிய ஊரில் 'ஷெட்டில்' பண்ணிக் கொள்கின்ற விடயத்தில் நான் பெரிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. 150 ஆண்டுகளாக 'ஷெட்டில்' ஆக முடியாத சமூகத்தினது அகராதியில் 'ஷெட்டில்' என்ற சொல்லே இல்லை. இத்தனை வளமான இந்தப் பிரதேசங்களில், உழைத்து உழைத்து ஓடாய்ப் போன பிறகும் ஒரு துண்டு நிலத்தை உரிமை கொள்ள முடியாத மக்களுடன் தினமும் உண்டு, உறங்குவதைப் பெருமை என்றோ பெருந்தன்மை என்றோ சொல்லமாட்டேன். நானும் இலங்கை சோசலிஷ குடியரசின் பிரஜை என்கின்ற அவமான உணர்வு, என்னைத் தின்கிறதென்றே சொல்வேன்.

வாழ்வதற்கு ஒரு வீடும் ஆரோக்கியமான உணவும் தங்களைச் சீரமைத்துக் கொள்ளக்கூடிய கல்வியும் ஆரோக்கியத்தைப் பேண மருத்துவமும் இல்லாத மலையக சமூகத்தை வலிமை பெற்ற தன்னுணர்வுடன் எழுந்து நிற்பதற்கான சமூகமாக மாற்றுவதற்கு என்று சொல்லிக்கொண்டு செய்யப்படும் திட்ட வரைபுகள் எதுவும் இந்த மக்களின் மூளையிலிருந்தோ இதயத்திலிருந்தோ தயாரிக்கப்படுவதில்லை. இதனால்தான், மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்று சொல்லிக் கொண்டு கிளம்பிய மலையகத்துக்கு வெளியே உள்ள சக்திகள் தோல்வியைச் சந்தித்தன.

'எழுச்சி' கரமாக அவ்வப்போது தோற்றம் பெறுகின்ற நிறுவனங்களும் அமைப்புகளும் காலப்போக்கில் காணாமல் போவது இங்கு சாதாரணம். மலையகத்துக்கான செயற்றிட்டங்களில் பணியாற்றிய சில செயற்பாட்டாளர்கள் சொல்வது இதுதான். "ஓர்கனைஸ்ட் இல்லாத ஆட்கள்". ஆமாம்! இங்கு எதுவும் ஒழுங்கில்லைத்தான்.

எங்களது ஒழுங்குக்குள் அவர்கள் இல்லை; அவர்களது ஒழுங்குக்குள் நாம் இல்லை. ஒழுங்கற்ற விதிகளால் காலங்காலமாக ஒடுக்குமுறைக்குள்ளாகிப் பழகியவர்களிடம் ஒழுங்கை எதிர்பார்க்கின்ற வன்முறையை போதாமைகளால் கடக்க முயலும் வேடிக்கை மனிதர்கள் நாம்.

ஆனால், 400 சதுர அடிகள் லயன் அறைகளிலிருந்து பல சக்திமிக்க குரல்கள் எழுந்து ஒலித்திருக்கின்றன; இப்போதும் ஒலித்தபடியுள்ளன. அந்தக் குரல்கள் தான் வெறும் சுற்றுலா வெளிகளாகத் தெரியும் சமவெளிகளில் மனிதர்களும் வாழ்கிறார்கள் என்று உரத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலப்பரப்புக்கு வெளியே உள்ள சுக வாழ்வுக்கு பழகிய நாம் ஆதரவுக் குரல்களாக முடியுமே தவிர, அந்தக் குரல்களை 'மிமிக்' செய்வதென்பது போலித்தனமாகும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 18 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 18, 2020
TUESDAY
VOL: 006/075
RS. 10.00
UPCOUNTRY ★★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk





வோர்விக் தோட்டக் குடியிருப்பில் தீ;

# 14 வீடுகள் தீக்கிரை

**14 குடும்பங்களை சேர்ந்த 64 பேர் நிர்க்கதி**

**மின்சாரக் கசிவே காரணமெனக் கண்டுபிடிப்பு**

**ஸ்தலத்துக்கு செந்தில் தொண்டமான் உடன் விஜயம்**

*எம்.செல்வராஜா*

வெலிமடை - வோர்விக் பெருந்தோட்டம், மார்ட்டின் பிரிவிலுள்ள இலக்கம் 7 குடியிருப்பில், நேற்று (17) முற்பகல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, 14 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன என்று, வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

பெருந்தோட்டத்துறை அமைச்சர்

## கடமைகளைப் பொறுப்பேற்றார்



பெருந்தோட்டத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள அமைச்சர் ரமேஸ் பத்திரன, அமைச்சின் கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று (17) பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர். தொடர்ச்சி P2

நாட்டுக்கு

## 'பாதகமான ஒப்பந்தங்களில் அரசாங்கம் கைச்சாத்திடாது'

ஊடகங்கள் வாயிலாக எவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், எம்சிசி உள்ளிட்ட நாட்டுக்குப் பாதகமான எந்தவோர் ஒப்பந்தத்திலும் அரசாங்கம் கைசாத்திடாதென்று, நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2






தொழிலாளர் தேசிய சங்கத்தின்

## பிரதிப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து திலகர் நீக்கம்?

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிப் பொதுச் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜை, அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். 23ஆம் திகதி நடைபெறவுள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் உயர்மட்டக் குழு கூட்டத்தில் இதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது. தொடர்ச்சி P2



## முட்டை விலை அதிகரிப்பு

உள்ளூர்ச் சந்தையில், முட்டையொன்றின் விலை 24 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது. தொடர்ச்சி P2



முன்னாள் எம்.பிக்களின்

மதிப்பீட்டு அறிக்கைப்படி

## பாதுகாப்பு நீக்கப்படும்


கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் குறைப்பது அல்லது நீக்குவது தொடர்பில், பாதுகாப்புப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்குவதற்கு முன்னர், தொடர்ச்சி P2

அரசாங்கம் பதவியேற்ற 5 நாள்களில்

## முழு நாடும் பகலில் இருண்டது

*மகேஸ்வரி விஜயனந்தன்*

நாடளாவிய ரீதியில், நேற்று (17) பிற்பகல் 12:35 மணிக்குத் தடைப்பட்ட மின்விநியோகம், மாலை வரையிலும் வழமைக்குத் திரும்பாமையால், பல நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததுடன், மின்விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன. தொடர்ச்சி P2



## பங்கேற்பு...

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பத்தரமுல்லயிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில், நேற்று (17) கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்நிகழ்வில், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்துகொண்டார்.

ஒன்றரை வருடங்களுக்குத் தேவையான

## 'மஞ்சளை இறக்குமதி செய்ய அனுமதிப்போம்'

நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் மஞ்சள் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்வதற்கு, ஒன்றரை வருடங்களுக்குத் தேவையான மஞ்சளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமெனத் தெரிவித்த கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச் செய்கை அபிவிருத்தி, தொடர்ச்சி P2



புத்தசாசன அமைச்சு விவகாரம்;

## உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுகள் ஆகிய இரண்டையும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே வகிக்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கக் கோரி, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று, நேற்று (17) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அடிப்படை உரிமை மனுவில், ஜனாதிபதி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பில் 9, 30 மற்றும் 105(4) இன் பிரகாரம், இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆகையால், புத்தசாசன அமைச்சை வேறொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஜனாதிபதியால் வழங்கமுடியாது என, மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

பட்டதாரிகளின் பெயர் பட்டியல்;

## www.pubad.gov.lk இல் வெளியானது

25 மாவட்டங்களிலும் தொழில் பெறும் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் நியமனக் கடிதங்கள் அமைச்சின் ஊடாக, தொடர்ச்சி P2

## 'எனது கரங்களால் ஒரு தவறும் நேராது'

*றம்ஸி குத்தூஸ்*

"பல்வேறு சவால்களை நீதியமைச்சு எதிர்நோக்கவுள்ளது. அவற்றைக் கருத்திற்கொண்டு, இலங்கையிலுள்ள அனைவருக்கும் இனமத பேதமின்றி, ஒரு தாயின் பிள்ளைகள் போல் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமானவற்றைச் செய்வதற்கு, தொடர்ச்சி P2




## டீசைட் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

*செ.தி.பெருமாள்*

ஆர்ப்பிக்கோ கம்பனியின் கீழ் இயங்கும் மஸ்கெலியா - சாமிமலை டீசைட் தோட்டத் தொழிலாளர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று (17) காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். டீசைட் தோட்டக் காரியாலயத் திடலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சுமார் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 14 வீடுகள் தீக்கிரை



தீ விபத்தால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் இவர்கள் வோர்விக் பெருந்தோட்ட சிறுவர் சமூக பராமரிப்பு நிலையத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உலருணவு, சமைத்த உணவு வகைகளை இடர்முகாமைத்துவ பிரிவு வழங்கி வருகிறது.

பாதிக்கப்பட்டவர்களில் 20 ஆண்களும் 29 பெண்களும் 15 சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தில் எவருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படாதபோதிலும் வீடுகளில் இருந்த உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன என்று, பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சாரக் கசிவே தீ விபத்துக்குக் காரணம் என்று, மின்சார சபையினர், பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த பிரதமரின் பெருந்தோட்ட இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தார்.

மேலும் அவர்கள் தங்குவதற்கான தற்காலிக இடமொன்றை அமைக்குமாறு தோட்ட நிர்வாகத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும், தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபருடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடி, பாதிக்கப்பட்டோருக்கு வெலிமடை கிராம சேவகர் ஊடாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தேவையான உலருணவுப் பொருள்களை வழங்குமாறும், செந்தில் தொண்டமான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்பை மீளக் கட்டமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கடமைகளைப் பொறுப்பேற்றார்

பெருந்தோட்ட விவசாய உற்பத்திகளை மேம்படுத்த உள்ளதாகவும் அவற்றுக்கான கேள்விகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்ளநாட்டு பொருளாதாரத்தை ஊக்குவிப்பதே ஜனாதிபதி, பிரதமரின் பிரதான கொள்கையாக உள்ளதெனவும் அதன் நோக்கத்துக்கு வலுச்சேர்க்கக் கூடியத் துறைகளாக பெருந்தோட்டதுறை, விவசாயத்துறையே உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த மாதத்தில் மேற்படி அமைச்சின் அதிகாரிகள் சகலரும் இணைந்து, உள்நாட்டு உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர் எனவும் தெரிவித்தார்.

அதனால் பல சவால்களுக்கு மத்தியிலும் கடந்த வருடத்தில் இந்தத் துறைகள் அடைந்த இலக்குகளை இவ்வருடத்திலும் எட்டிப்பிடிக்க முடிந்துள்ளதெனத் தெரிவித்த அவர், விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான கேள்விகளை அதிகரிக்கச் செய்வதற்கான சரியான திட்டமிடல் ஒன்றுடனான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 'பாதகமான ஒப்பந்தங்களில் அரசாங்கம் கைச்சாத்திடாது'

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போதும், நாட்டுக்குப் பாதகமான எந்தவோர் ஒப்பந்தத்திலும் அரசாங்கம் கைசாத்திடவில்லை எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்து விஹாரையின் மஹாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுகொண்டதை அடுத்து, ஊடங்களுக்குக் கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், மேற்குறிப்பிட்டதைப் போன்ற எந்தவோர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் தலையீடு செய்யமாட்டார் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

எனவே, மக்களுக்கு சலுகைகளை வழங்குவதாகப் போலி வாக்குறுதிகளை வழங்குவோர், அரசியலிருந்து விலகிவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், கொள்கைகளுக்கு அமைவாக, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்க வேண்டுன்றும் தெரிவித்துள்ளார்.

# www.pubad.gov.lkஇல்...

எதிர்காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் என, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ள பட்டதாரிகள், செப்டெம்பர் முதலாம் திகதி முதல் கடமைகளுக்குச் சமூகமளிக்க வேண்டுமெனத் அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர் பட்டியலை http://www.pubad.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என அமைச்சு அறிவித்துள்ளது.

# மதிப்பீட்டு அறிக்கைப்படி பாதுகாப்பு நீக்கப்படும்

எம்.பிகளுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமா என்பதுத் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அதேபோல, தோல்வியடைந்த எம்.களுக்கு, உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்குமாயின், அவர்களுக்காகப் பாதுகாப்பு நிலைமை தொடர்பில், இதன்போது கவனம் செலுத்தப்படும்.

"முன்னாள் எம்.பிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபரின் ஊடாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில், 71 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்தனர். அதில், ஆகக் கூடுதலாக ஏழு எம்.பிகள், கம்பஹா மாவட்டத்தில் உள்ளனர் என்பதுடன், தோல்வியடைந்தவர்களில் பெரும்பாலானோர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முட்டை விலை அதிகரிப்பு

கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பமான மார்ச் மாதமளவில் முட்டை ஒன்று 18 ரூபாய்க்கும் 20ரூபாய்க்கும் இடையில் விற்பனை செய்யப்பட்டது.

அதன்பின்னர், அரசாங்கத்தின் தலையீட்டால் முட்டையொன்றின் விலை 10 ரூபாய் வரையிலும் குறைக்கப்பட்டது. எனினும் ஜூலை மாதம் 20 ரூபாய் வரையிலும் அதிகரித்திருந்தது.

இதேவேளை, சில பிரதேசங்களில் முட்டையொன்றின் விலை 25 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் முட்டையை நாளாந்தம் உணவுக்காக பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 85 இலட்சம் பேர் ஆவார். முட்டையின் விலை அதிகரித்துள்ளமையால், நுகர்வோரின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் குறைந்துள்ளது.

உள்ளூரில் கால்நடை தீவன விலை அதிகரித்துள்ளமையால் முட்டையின் விலை அதிகரித்துள்ளது எனவும் தீவன விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்குமாயின், முட்டையின் விலையைக் குறைக்க முடியுமெனவும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

# உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

பாதுகாப்பு அமைச்சை தனக்கு கீழ் ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். எனினும், புத்தசாசன அமைச்சை பெற்றுக்கொள்ளாமையின் ஊடாக, அரசமைப்பின் 9,10 மற்றும் 12.1 விதிகள் மீறப்பட்டுள்ளன என அறிவிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# 'எனது கரங்களால் ஒரு தவறும் நேராது'

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவேன்" எனத் தெரிவித்த நீதியமைச்சர் அலி சப்ரி, "அரசமைப்புக்கும் மக்களுக்கும் எதிராக, ஒரு தவறும் எனது கைகளால் நேராது" என்றார்.

தனது கடமைகளை நீதியமைச்சின் கட்டடத்தில் வைத்து, நேற்று(17) மாலை பொறுப்பேற்றுக்கொண்ட அவர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> **நாட்டின் நலனுக்காகத் திட்டங்கள் மாத்திரமே தன்னால் முன்னெடுக்கப்படும். நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளை நன்கறிந்த நபர் என்பதாலேயே இந்தப் பதவியை, ஜனாதிபதி தனக்குத் தந்துள்ளார்.**

நாட்டின் நலனுக்காகத் திட்டங்கள் மாத்திரமே தன்னால் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர், நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளை நன்கறிந்த நபர் என்பதாலேயே இந்தப் பதவியை, ஜனாதிபதி தனக்குத் தந்துள்ளதாகத் தெரிவித்த அவர், சிறைச்சாலைக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் உதவும் அதிகாரிகள் உள்ளனர். அந்த நிலைமையிலிருந்து மீண்டு வருவதற்கான அவசியம் தோன்றியுள்ளது என்றார்.

சட்டத்தரணியாக 20 வருடங்கள் தான், பணியாற்றி இருப்பதாகத் தெரிவித்த அவர், தனது அனுபவத்தில் நீதிப் பொறிமுறையில் ஏற்படும் தாமதங்களே, இன்று நம்முன் இருக்கும் பெரும் சவாலாகக் காணப்படுகின்றது என்றார்.

அந்தச் சவால்களை வெற்றிகொண்டு, அரசாங்கத்தின் கொள்கைளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசமைப்பின் பிரகாரமான செயற்பாடுகளைத் தான் முன்னெடுப்பதாகவும், இனவாதம் பேசிக் காலத்தையும் நேரத்தையும் வீணடிக்காமல், இன வேறுபாடுகளைக் கலைந்து, அச்சமின்றி வாழக்கூடிய வகையிலான நீதிக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான உதவிகளை, ஜனாதிபதிக்குப் பெற்றுக்கொடுக்க முன் நின்று செயற்படுவேன் என்றும் தெரிவித்தார்.

# பிரதிப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து திலகர் நீக்கம்?

தொழிலாளர் தேசிய சங்கத்தின் யாப்புக்கமையவே, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கட்சியின் உயர்பீட உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளராக எஸ்.பிலிப் இருக்கின்ற நிலையில், அந்த பதவியில் மாற்றங்கள் ஏற்படப்போவதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருவதை தொழிலாளர் தேசிய சங்கத்தினர் மறுத்துள்ளனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிப் பொதுச்செயலாளராக பதவிவகித்த திலகரையே அந்தப் பதவியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் நினைத்தப்படி அவரை விலக்க முடியாதெனவும் எனவே அத்தொழிற்சங்கத்தின் யாப்புக்கமைய அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிய வருகிறது.

எனவே வெற்றிடமாகப்போகும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிப் பொதுச்செயலாளர் பதவிக்கு அத்தொழிற்சங்க உறுப்பினருக்குள் போட்டிகள் ஏற்படலாமெனவும் அறிய முடிகிறது.

# முழு நாடும் பகலில் இருண்டது

கெரவலப்பிட்டி மின்நிலையத்தின் துணை மின் நிலைய பரிமாற்ற அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் மின்சாரத் தடை ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'மஞ்சளை இறக்குமதி செய்ய அனுமதிப்போம்'

அவைசார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, மஞ்சளை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

"ஒரு கிலோகிராம் மஞ்சள் தூளை 700 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்வோருக்கு எதிராக, நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக, சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்" என்றார்.

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டியவில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில், மஞ்சளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு, ஒன்றரை வருடங்களுக்குள் மஞ்சள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அதுவரையிலும், நாட்டுக்குத் தேவையான மஞ்சளை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிப்போம்" என்றார்.

முன்பைப் போல, தாராளமாக மஞ்சளை இறக்குமதி செய்வதற்கு இடமளிக்கப்படாது. தாராளமாக இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தமையால், நாட்டில் சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இல்லாமல் செய்யப்பட்டு விட்டார்கள் எனத் தெரிவித் அவர், நாட்டுக்குப் போதுமான அளவு மஞ்சள் கையிருப்பில் இல்லையேல், மஞ்சள் இறக்குமதிக்கு இடமளிக்கப்படும் என்றார்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, ஜனாதிபதியின் அனுமதியுடன் அதற்கு இடமளிப்பேன் எனத் தெரிவித்த அவர், எனினும், தேவையான சிறுபயிர்களை நாட்டுக்குள்ளே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

தேவையான மஞ்சள் இருக்கிறது; எனினும், மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மஞ்சளைப் பதுக்கி, அதிகூடிய விலையில் விற்பனை செய்கின்றனர் என, நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மஞ்சளைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், நுகர்வோரைச் சங்கடப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்ப டமாட்டாது என்றார்.

# டூசைட் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

தோட்ட நிர்வாகத்தால் தமக்கு தொடர்ச்சியாக அநீதி இழைக்கப்பட்டு வருவதாகவும் ஒரு வருடமாக வேலை நாள்கள் குறைக்கப்பட்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த தொழிலாளர்கள், "கூடுதலான தொழிலாளர்கள் வெளியிடங்களுக்கு தொழிலுக்குச் சென்றுவிட்டனர். அத்துடன் தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் நாம் பறிக்கும் கொழுந்தை மாற்றிடங்களுக்கு அனுப்புகின்றனர்.

> **கூடுதலான தொழிலாளர்கள் வெளியிடங்களுக்கு தொழிலுக்குச் சென்றுவிட்டனர். அத்துடன் தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் நாம் பறிக்கும் கொழுந்தை மாற்றிடங்களுக்கு அனுப்புகின்றனர்**

இதனால் தேயிலைத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த ஐம்பதுக்கும் மேற்பட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். "மேலும் தொழிலாளர்களின் சேமநல விடயங்கள் மறுக்கப்பட்டு தேயிலை மலைகள் காடாக்கப்பட்டுள்ளதால், தேயிலை மலைகளில் சிறுத்தைகள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே எமக்கு நீதி வேண்டும்" என தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.




# விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலி

நுவரெலியா நிருபர்கள்

நுவரெலியா பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில், நேற்று (17) மதியம் இரண்டு மணியளவில் இடம்பெற்ற விபத்தில், 35 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா - மீப்பிலிமான பகுதியைச் சேர்ந்த நபரொருவரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிப் பயணிப்பதற்காக, நுவரெலியா பஸ்தரிப்பிடத்துக்கு வருகைதந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் முன்சில்லில் சிக்குண்டே, மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி, நடத்துநர் ஆகியோர், நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ள நிலையில், விபத்து தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரேத பரிசோதனைக்காக, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில், சடலம் வைக்கப்பட்டுள்ளது.

ஆறு வருடங்களாக

# மண்சரிவு அபாயம் தொடர்கிறது

60 பேர் பாதிப்பு

மஹிந்த குமார்

கஹாவத்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒப்பாத்த மூன்றாம் பிரிவு தோட்டத்தில், 27 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர், சுமார் ஆறு வருடங்களாக, மண்சரிவு அபாய எச்சரிக்கையுடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2014ஆண்டு ஜூன் மாதம் பெய்த கடும் மழை காரணமாக, அத்தோட்டத்தின் லயன் குடியிருப்பு ஒன்றுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



அந்த லயன் குடியிருப்பில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள், ஒரு சில தினங்களில் மீண்டும் அதே லயன் குடியிருப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும்கூட, மேற்படி மக்கள் அந்தக் குடியிருப்பிலேயே தொடர்ந்து வசித்து வருகின்றனர்.

மேற்படி லயன் குடியிருப்பில், ஐந்து குடும்பங்கள் மாத்திரம் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் தாம், இன்னும் பாதிக்கப்பட்ட வீடுகளிலேயே வசித்து வருவதாகவும், மேற்படி மக்கள் தெரிவித்துள்ளனர்.

உயிராபத்துகள் ஏற்படுவதற்கு முன்பாக, தம்மைப் பாதுகாப்பான இடமொன்றில் குடியமர்த்துவதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுக்கின்றனர்.

பதுளை பொலிஸ் நிலையத்தில்

# குற்றத்தடுப்புச் செயற்பாட்டு பணியகம் திறப்பு

எம்.செல்வராஜா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கியா' வேலைத்திட்டத்தின் கீழ், குற்றத்தடுப்புச் செயற்பாட்டுப் பணியகம், பதுளை பொலிஸ் நிலையத்தில், நேற்று (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தின் ஒன்பது பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில், விசேட பயிற்சி பெற்ற 50 பொலிஸாரை உள்ளடக்கிய வகையில், மேற்படி பணியகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை முற்றாகத் தடுப்பது, திருட்டு, கொள்ளைகளை ஒழிப்பது, வாகனக் குற்றங்கள், ஊழல், மோசடிகளைத் தடுப்பது போன்ற விசேட பொலிஸ் பிரிவுகளையும், பதுளை மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவையும் ஒன்றிணைத்துச் செயற்படும் வகையிலேயே, மேற்படிப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளது.

# உலருணவுப் பொதிகள் பங்கீடு

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிகாட்டலில், நாடெங்கிலுமுள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் சங்கக் கிளைகளினூடாக, பாடசாலைகளுக்குத் தற்போது உலருணவுப் பொதிகள் பங்கிடப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாணவருக்கும் பத்து முட்டைகள், ஆறு சமபோஷ பக்கெட்டுகள், மூன்று பிஸ்கட் பக்கெட்டுகள், அரிசியிலான நூடில்ஸ் 1 பக்கெட், கடலை 1 கிலோகிராம் உள்ளடங்கிய உணவுப்பொதிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

கொவிட் வைரஸ் தொற்று காரணமாக, போஷாக்கு உணவு நிகழ்ச்சித் திட்டம் பாடசாலைகளில், மார்ச் 13ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், மாணவர்களின் போஷாக்கு மட்டத்தை உயர்த்தும் நோக்கில், பாடசாலைகளில் மீண்டும் உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# உலக ஆதிவாசிகள் தினம்

மொஹொமட் ஆஸிக்

உலக ஆதிவாசிகள் தினத்தையொட்டிய விசேட நிகழ்வு, மஹியங்கனை - தம்பான ஆதிவாசி கிராமத்தில், நேற்று (16) முன்தினம் நடைபெற்றது.

கொவிட் வைரஸ் பரவல் காரணமாக, சிறியளவிலேயே ஆதிவாசிகள் தினம் இம்முறை கொண்டாடப்பட்டது.



ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தம்பான, ரதுகல, நில்கல, பொல்லெபெத்த, ஹேனானிகல, வாகரை ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆதிவாசிகள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

சமய விவகார மற்றும் கலாசார அமைச்சு, பதுளை மாவட்டச் செயலகம், மஹியங்கனை பிரதேச செயலகம் என்பன இணைந்து, இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

# பரீட்சைகள் இன்று ஆரம்பம்

எம்.செல்வராஜா

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கால்நடை விஞ்ஞானப் பிரிவு மற்றும் விவசாய பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள், இன்று (18) ஆரம்பமாகி, 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக, பல்கலைக்கழக துணை வேந்தர் கலாநிதி ஜயந்தலால் ரட்ணசேகர தெரிவித்தார்.




இது தொடர்பில் மேலும் கூறிய அவர், 'ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கால்நடை விஞ்ஞானப் பிரிவு மற்றும் விவசாய பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் பின்னர் நடத்தப்படும் என்றார்.

45 சந்தேகநபர்களின்

# வங்கிக் கணக்குகளில் ரூ.2,200 மில்லியன் பரிமாற்றம்

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 45 பேரின் வங்கிக் கணக்குகளிலிருந்து 2,200 மில்லியன் ரூபாய் பரிமாற்றப்பட்டுள்ளதென, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில், 7 நாள்களில் பெண்ணொருவர் உள்ளடங்களாக 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த 45 பேரும், நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இவர்களின் வங்கிக் கணக்குகளில் 2,200 மில்லியனுக்கு அதிகமான பணம் பறிமாற்றப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், அந்த வங்கிக் கணக்குகளில், அந்தப் பணம் இப்போது இல்லை என்றும் இது தொடர்பான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள 45 பேரும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதால், இவர்களைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், கடந்த வாரங்களில் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருளை வைத்திருந்தவர்கள் உள்ளிட்ட பலர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

என்.ஜெயரட்ணம்

புளத்சிங்கள, கல்லுமலைத் தோட்டத்திலுள்ள “இருபது காம்புரா” தோட்டக் குடியிருப்பாளர்கள், இருபது வருடங்களாக எதிர்நோக்கி வந்த குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

தோட்ட மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட சன் பிரபாவின் நிதி உதவியில், குடிநீர் வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சுமார் 40,000 ரூபாய் செலவில் 1,500 மீற்றர் தொலைவிலுள்ள மலைப் பகுதியில் இருந்து நீர்க் குழாய்கள் மூலம், குடிநீர் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.



இதனூடாக, 13 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 40 பேர் நன்மை அடைந்துள்ளனர்.

# 'அநாமதேய அழைப்புக்கு பதிலளிக்காதீர்'

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் நிலையத்திலிருந்து கதைப்பதாகக் கூறி, '0701291096' என்ற அலைபேசி இலக்கத்தினூடாகக் கப்பம் கோரும் நடவடிக்கையில், விஷமிகள் ஈடுபட்டு வருவது தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த மஸ்கெலியா பொலிஸார், அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களைக் கோரியுள்ளார்.

மேற்படி அலைபேசி இலக்கத்திலிருந்து, கடந்த இரண்டு தினங்களாக, மஸ்கெலியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த அழைப்புக்கு வர்த்தகர் ஒருவர் பதிலளித்த போது, மறுமுனையிலிருந்து பேசிய நபர், தான் மஸ்கெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி எனவும் தனது பெயர் பண்டார எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தனது அலைபேசி இலக்கத்துக்கு, விரைவு பணம் அனுப்புமாறும் தனது வண்டி பழுது அடைந்துள்ளதால், அதனைச் சரிசெய்த பின்னர் பணத்தை மீளத் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அழைப்பில் சந்தேகம் ஏற்பட்டதால், மேற்படி வர்த்தகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், மஸ்கெலியா பொலிஸார், வர்த்தகசங்கச் செயலாளரினூடாக சகல வர்த்தகர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

மேற்படி இலக்கத்திலிருந்து அழைப்புகள் வந்தால், பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.



# குப்பைகளை கொட்டுவதால் மக்கள் அவதி

மொஹொமட் ஆஸிக்

கண்டி - யஹலதென்ன பிரதேசத்தில், சட்டவிரோதமாகக் குப்பைகள் கொட்டப்படுவதாகவும் இதனால், பிரதேச மக்கள் பாரிய சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றாடல் முக்கியத்துவம்வாய்ந்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இப் பிரதேசத்தில், பல சுற்றுலா ஹோட்டல்கள் அமைந்துள்ளதுடன், உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துசெல்லும் பிரதேசமாகவும், இப்பிரதேசம் அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில், லொறிகளில் குப்பைகளைக் கொண்டு கொட்டுவதால், இப் பிரதேசத்தில் சுற்றாடல் மாசடைந்து வருவதுடன், டெங்கு நோயும் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் அகில அமரதுங்க, இப்பிரதேசத்தைச் சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ள போதும், சிலர் சட்டவிரோதமான முறையில் லொறிகளில் குப்பைகளைக் கொட்டி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

இதனால், சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதுடன், டெங்கு நோய் பரவுவதும் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார். இதற்கெதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

AUGUST 18, 2020
TUESDAY
VOL: 006/075
RS. 10.00
LATE CITY★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk




### அரசாங்கம் பதவியேற்ற 5 நாள்களில்

# முழு நாடும் பகலில் இருண்டது

## சமிக்ஞைகள் அணைந்தன

## போக்குவரத்துகள் பாதிப்பு

## நீர் விநியோகத்தில் தடங்கல்

## ஆராய குழுவை நியமிக்க பணிப்பு

**மகேஸ்வரி விஜயனந்தன்**

நாடளாவிய ரீதியில் நேற்று (17) பிற்பகல் 12:35 மணிக்குத் தடைப்பட்ட மின்விநியோகம், மாலை வரையிலும் வழமைக்குத் திரும்பாமையால், பல நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததுடன், மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன.

கெரவலப்பிட்டி மின்நிலையத்தின் துணை மின் நிலைய பரிமாற்ற அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் மின்சாரத் தடை ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத் தடையால், பெருந்தெருக்கள், வீதிகள்,

தொடர்ச்சி P2

## முட்டை விலை அதிகரிப்பு



உள்ளூர்ச் சந்தையில் முட்டையொன்றின் விலை, 24 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பமான மார்ச் மாதமளவில் முட்டை ஒன்று 18 ரூபாய்க்கும் 20 ரூபாய்க்கும் இடையில் விற்பனை செய்யப்பட்டது.

அதன்பின்னர், அரசாங்கத்தின் தலையீட்டால் முட்டையொன்றின் விலை 10 ரூபாய் வரையிலும் குறைக்கப்பட்டது. எனினும், ஜூலை மாதம் 20 ரூபாய் வரையிலும் அதிகரித்திருந்தது.

இதேவேளை, சில பிரதேசங்களில் முட்டையொன்றின் விலை 25 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## 'எனது கரங்களால் ஒரு தவறும் நேராது'

**றம்ஸி குத்தூஸ்**



பல்வேறு சவால்களை நீதியமைச்சு எதிர்நோக்கவுள்ளது. அவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கையிலுள்ள அனைவருக்கும் இன மத பேதமின்றி, ஒரு தாயின் பிள்ளைகள் போல் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமானவற்றைச் செய்வதற்கு, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவேன் எனத் தெரிவித்த நீதியமைச்சர் அலி சப்ரி,

தொடர்ச்சி P2

## 'முழு அரசமைப்பையும் ஒழிக்க வேண்டும்'

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மட்டுமன்றி, முழு அரசமைப்பையும் முற்றாக ஒழித்துவிட்டு, புதிய அரசமைப்பை உருவாக்குவதே தங்களுடைய பிரதான நோக்கமாகுமென, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக இவர், தெரிவு செய்யப்படக்கூடும் என ஆரூடம் கூறப்பட்டுள்ள நிலையிலேயே, மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

### 21/4 தாக்குதல்:

## மைத்திரிக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஒகஸ்ட் 26ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## புத்தசாசன அமைச்சு விவகாரம்; உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்



பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுகள், ஆகிய இரண்டு அமைச்சுகளையும் ஜனாதிபதி வகிக்கவேண்டுமென கட்டளையை பிறப்பிக்கக் கோரி, உயர்நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை மனுவொன்று, நேற்று (17) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அடிப்படை உரிமை மனுவில்,

தொடர்ச்சி P2

### அவைத் தலைவர் தினேஷ்;

## பிரதம கொறடா ஜோன்ஸ்டன்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் புதிய அவைத் தலைவராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



தொடர்ச்சி P2



## அலங்காரக் கந்தனுக்கு அரோகரா...

நல்லூர்க் கந்தப்பெருமானின் இரதோற்சவம், நேற்று (17) வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்: என். ராஜ்)

### பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு;

## 13,000 பேரின் பெயர்கள் நீக்கம்

### 51,000 பேருக்கு வேலைவாய்ப்பு

25 மாவட்டங்களிலும் தொழில் பெறும் 51 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் பெயர்ப் பட்டியலை http://www.pubad.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம்

## பாதுகாப்பு நீக்கப்படும்


கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் குறைப்பது அல்லது நீக்குவது தொடர்பில், பாதுகாப்பு பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்குவதற்கு முன்னர், எம்.பிகளுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமா என்பது தொடர்பில் மதிப்பீட்டு

தொடர்ச்சி P2

### இலங்கையில் கொவிட் –19;

## 2,900ஆக அதிகரித்தது



இலங்கையில், கொவிட் - 19ஆல் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, 2,900ஆக அதிகரித்தது.

கொவிட் -19ஆல் பாதிக்கப்பட்ட மேலும் எழுவர், நேற்று (17) கண்டறியப்பட்ட நிலையிலேயே, இந்தத் தொகை 2,900ஆக அதிகரித்துள்ளது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருந்து நாடு திரும்பிய 5 பேருக்கும் ஓமானில் இருந்து நாடு திரும்பிய இருவருக்கும், கொவிட் - 19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என, அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த மேலும் 6 பேர், சிகிச்சை நிறைவடைந்து,

தொடர்ச்சி P2

## 'நுண்கடனால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்'



நுண்கடன் திட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுமெனத் தெரிவித்த சமுர்த்தி, நுண்நிதி, சுயதொழில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்றார்.

தொடர்ச்சி P2



## சந்தோஷம்...

நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (படப்பிடிப்பு: கித்சிறி டீ மெல்)

PAGE 1 தொடர்ச்சிகள்

# முட்டை விலை அதிகரிப்பு

இலங்கையில் முட்டையை நாளாந்தம் உணவுக்காக பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 85 இலட்சம் பேர் ஆவார். முட்டையின் விலை அதிகரித்துள்ளமையால், நுகர்வோரின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் குறைந்துள்ளது.

உள்ளூரில் கால்நடை தீவன விலை அதிகரித்துள்ளமையால் முட்டையின் விலை அதிகரித்துள்ளது எனவும் தீவன விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்குமாயின், முட்டையின் விலையைக் குறைக்க முடியுமெனவும் அகில இலங்கை முட்டை உற்பத்தி யாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.



# 'முழு அரசமைப்பையும் ஒழிக்கவேண்டும்'

"தன்னைச் சபாநாயகராகப் பெயர் குறிப்பிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குச் சபையிலிருக்கும் சகல உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த முன்மொழிவுக்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்றார்.

மாத்தறையில், நேற்று (17) நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். "அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்படவேண்டும். அதுதான், நாட்டுக்காகச் செய்யப்படவேண்டிய பெறுமதி வாய்ந்த பொறுப்பாகும். 19ஆவது திருத்தத்தை மட்டுமன்றி, முழு அரசமைப்பையும் முற்றாக ஒழித்துவிட்டு, புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதே தன்னுடைய நோக்கமாகும்" என்றார்.

"எனினும், 19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு, தேவையான திருத்தங்களை மட்டுமே என்னால் மேற்கொள்ள முடியும். அதன்பின்னர், சகலருடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சகலரின் கருத்துகளுக்கும் இடமளித்து, நாட்டுக்குத் தேவையான உகந்த அரசமைப்பை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

அதன்பின்னர், மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்ற கேள்வி எழுகிறது. புதிய முறைமையில் அன்றி, கூடிய விரைவில் தேர்தலை நடத்தக்கூடிய பழைய முறைமையின் கீழ், மாகாண சபைத் தேர்தலை நடத்தினால். நல்லது. அதனை இன்னும் ஆறு மாதங்களுக்குள் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.



# 'நுண்கடனால்...

வடக்கு, கிழக்கு மாகாண மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு சுய கைத்தொழில் முறைமைகளை அறிமுகப்படுத்தப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த அரசாங்கத்தின் காலப் பகுதியில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலேயே, அப்பகுதி மக்கள் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் என்றார்.

# முழு நாடும் பகலில் இருண்டது

ரயில் கடவைகளின் மின் சமிக்ஞைகள் செயலிழந்தன. இதனால், போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. கடமைகளை முடித்துகொண்டு ரயில்களில் வீடுகளுக்குச் செல்லவேண்டியவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

நீர் விநியோகத்திலும் தடை ஏற்பட்டது. மோட்டார் பம்பிகளைக் கொண்டு, கிணறுகளிலிருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் குடியிருப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மின்தடை நீங்கியதன் பின்னர், இரண்டொரு மணிநேரத்துக்குள் நீர்விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரமுடியுமென, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, மின்னணுவியல் தொழில்நுட்பத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளும் வழக்கு விசாரணைகளும் தடைப்பட்டன. அதுமட்டுமன்றி, எரிபொருள் விநியோகத்துக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. இதனால், எரிபொருள்களை நிரப்பிக்கொள்வதற்காக, சில நிலையங்களுக்கு முன்பாக, வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மின்சாரத் தடை ஏற்பட்டமைக்கான காரணத்தையும் மின்தடை எப்போது நீங்கும் என்பது தொடர்பிலான தகவல்களையும் தெரிந்துகொள்வதற்கு, பொதுமக்கள் பெரும் சிரமப்பட்டனர். குறுஞ்செய்திகளின் ஊடாக, தகவல்களைப் பெற்றுக்கொண்ட பலரும், தங்களுடைய அலைபேசியின் சார்ஜ் இறங்கியவுடன் அதனை ஓரத்தில் வைத்துவிட்டனர் என அறியமுடிகின்றது.

இதேவேளை, மின்சாரத் தடையைப் பயன்படுத்தி, மெழுகுவர்த்தி, மண்ணெண்ணை ஆகியவற்றின் விலைகளை ஒருசில வர்த்தகர்கள் கூடிய விலைக்கு விற்பனை செய்துள்ளனர் எனவும் நுகர்வோர் குற்றஞ்சாட்டினர்.

> **தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்துக்கு மன்னிப்புக் கோருவதாக, இலங்கை மின்சார சபை தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்திருந்த நிலையில், கெரவலப்பிட்டி உப-மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே மின்தடைக்கான காரணம்**

"மின் தடைக்கான முழு பொறுப்பையும் இலங்கை மின்சார சபையே ஏற்க வேண்டும்" என, மின் பாவனையாளர் சங்கத்தின் தேசிய செயலாளர், சஞ்சீவ தம்மிக்க, தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நீண்ட மின்தடை 2009, 2015, 2016ஆம் ஆண்டுகளிலும் ஏற்பட்டிருந்தது. இதன்போது, இந்த மின்தடைக்கான தீர்வாக, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பல பரிந்துரைகளை முன்வைத்தது எனத் தெரிவித் அவர், ஆனால், இந்தப் பரிந்துரைகளைச் செயற்படுத்தாமல் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள், பரிந்துரைகளைக் குப்பைக் கூடையில் போட்டு, தொழில்நுட்பக் கோளாறு இருப்பதாகத் தெரிவித்து, தமது கைகளைக் கழுவிக்கொள்ள முயற்சிக்கின்றனர் என்றார்.

மின்பிறப்பாக்கி கட்டமைப்பில் கோளாறு காணப்பட்டு, நாடு முழுவதிலும் மின்தடை ஏற்பட்டுள்ளதாயின், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் 300 மெகாவோட் மின்சாரத்தைச் சேர்ப்பது என்பது அவதானம் மிக்க செயற்பாடாகும் எனத் தெரிவித்த அவர், இந்த மின்பிறப்பாக்கி கட்டமைப்பை நவீனமயப்படுத்தி, இதை உரியமுறையில் பராமரிக்க வேண்டும். இந்தப் பரிந்துரைகளையே இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைத்துள்ளது என்றார்.

இதேவேளை, இந்தத் திடீர் மின்தடை தொடர்பில், இலங்கை மின்சார சபையிடமிருந்து, அறிக்கையொன்றைக் கோரியுள்ளதாக, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத், தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.


மின்பிறப்பாக்கி, கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறே மின்தடைக்கான காரணம் என்றும் லக்விஜய மின்உற்பத்தி செயற்பாடுகளில் எவ்வித கோளாறும் இல்லை என்றும் ஏனைய மின்உற்பத்திப் பிறப்பாக்கிகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், நாடு பூராகவும் ஏற்பட்ட மின் தடங்கல், தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்துக்கு மன்னிப்புக் கோருவதாக, இலங்கை மின்சார சபை தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்திருந்த நிலையில், கெரவலப்பிட்டி உப-மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே மின்தடைக்கான காரணம் என்று மின்சார அமைச்சு தெரிவித்தது.

தடைப்பட்ட மின்சார வழங்கலை, மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு, இரண்டொரு மணிநேரம் எடுக்குமென மின்சார அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்திருந்த போதிலும், தடைப்பட்ட மின்சாரம் மாலை ஆறு மணியைக் கடந்தும் வழமைக்குத் திரும்பிவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய மின்தடை தொடர்பிலான பின்னணியை ஆராயக் குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேராவுக்கு கட்டளையிட்டுள்ளதாகத் தெரிவித்த மின்சக்தி அமைச்சர், டலஸ் அழகப்பெரும, இந்தக் குழுவை இன்று (18) காலை 8.30 மணிக்கு அழைத்துள்ளதாகவும், இந்தக் குழு ஒரு வாரத்துக்குள் மின்தடை தொடர்பான அறிக்கையை வழங்கும் என்றார். இந்த மின்தடையானது, தொழிநுட்பக் கோளாரால் ஏற்பட்டதென்றும் இது நாசகாரச் செயல் அல்லவென்றும் தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதியன்று பதவியேற்றது. அமைச்சர்கள் தங்களுடைய கடமைகளை, ஒகஸ்ட் 17ஆம் திகதிக்குள் (நேற்று) பொறுப்பேற்கவேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பணித்திருந்தார்.

அரசாங்கம் ஆட்சியமைத்து ஐந்து நாள்களுக்குள் முழுநாடும் பகல் வேளையிலேயே இருண்டுவிட்டதென, சமூக வலைத்தளங்கள் உட்பட பரவலாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 'எனது கரங்களால்...

அரசமைப்புக்கும் மக்களுக்கும் எதிராக, ஒரு தவறும் எனது கைகளால் நேராது என்றார்.

தனது கடமைகளை நீதியமைச்சின் கட்டடத்தில் வைத்து, நேற்றுமாலை பொறுப்பேற்று க்கொண்ட அவர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் நலனுக்காகத் திட்டங்கள் மாத்திரமே தன்னால் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர், நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளை நன்கறிந்த நபர் என்பதாலேயே இந்தப் பதவியை, ஜனாதிபதி தனக்குத் தந்துள்ளதாகத் தெரிவித்த அவர், சிறைச்சாலைக்கும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் உதவும் அதிகாரிகள் உள்ளனர். அந்த நிலைமையிலிருந்து மீண்டு வருவதற்கான அவசியம் தோன்றியுள்ளது என்றார்.

சட்டத்தரணியாக 20 வருடங்கள் தான், பணியாற்றி இருப்பதாகத் தெரிவித்த அவர், தனது அனுபவத்தில் நீதிப் பொறிமுறையில் ஏற்படும் தாமதங்களே, இன்று நம்முன் இருக்கும் பெரும் சவாலாகக் காணப்படுகின்றது என்றார்.

அந்தச் சவால்களை வெற்றிகொண்டு, அரசாங்கத்தின் கொள்கைளை நடைமுறை ப்படுத்துவதற்கான அரசமைப்பின் பிரகாரமான செயற்பாடுகளைத் தான் முன்னெடுப்பதாகவும், இனவாதம் பேசிக் காலத்தையும் நேரத்தையும் வீணடிக்காமல், இன வேறுபாடுகளைக் கலைந்து, அச்சமின்றி வாழக்கூடிய வகையிலான நீதிக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான உதவிகளை, ஜனாதிபதிக்குப் பெற்றுக்கொடுக்க முன் நின்று செயற்படுவேன் என்றும் தெரிவித்தார்.



# மைத்திரிக்கு அழைப்பு

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு, அவருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில், ஆணைக்குழுவில் முன்னிலையில், இன்று (18) ஆஜராகுமாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்தனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை, ஒகஸ்ட் 21ஆம் திகதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> **ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது**

# 13,000 பேரின்

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் நியமனக் கடிதங்கள், அமைச்சின் ஊடாக விரைவில் வழங்கப்படும் என்று தெரிவித்த அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, தொழில் கிடைத்த அனைத்துப் பட்டதாரிகளும், செப்டெம்பர் 2ஆம் திகதியன்று, அருகிலுள்ள பிரதேச செயலகத்துக்குச் செல்ல வேண்டுமென்று அறிவித்தார்.

இதேவேளை, வேலைவாய்ப்புக்காக ஆரம்பத்தில் சேர்க்கப்பட்ட 13 ஆயிரம் பேரின் பெயர்கள், குறித்த பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீக்கப்பட்டவர்கள், அரச, தனியார்த் துறைகளில் தொழில் செய்பவர்கள் என்ற அடிப்படையிலேயே, அந்தப் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

> **51 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல், அரச சேவைகள், மாகாண சபைகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது**

# புத்தசாசன அமைச்சு...

ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பில் 9,30 மற்றும் 105 (4)இன் பிரகாரம், இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். ஆகையால், புத்தசாசன அமைச்சை வேறொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஜனாதிபதியால் வழங்கமுடியாது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சை தனக்கு கீழ் ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். எனினும், புத்தசாசன அமைச்சை பெற்றுக்கொள்ளாமையின் ஊடாக, அரசமைப்பின் 9,10 மற்றும் 12.1 விதிகள் மீறப்பட்டுள்ளன என அறிவிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

> **பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுகள், ஆகிய இரண்டு அமைச்சுகளையும் ஜனாதிபதி வகிக்கவேண்டுமென மனுவொன்று, தாக்கல் செய்யப்பட்டுள்ளது**

# பாதுகாப்பு நீக்கப்படும்

அறிக்கையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அதேபோல, தோல்வியடைந்த எம்.களுக்கு, உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்குமாயின், அவர்களுக்காகப் பாதுகாப்பு நிலைமை தொடர்பில், இதன்போது கவனம் செலுத்தப்படும்.

"முன்னாள் எம்.பிகளுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபரின் ஊடாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில், 71 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்தனர். அதில், ஆகக் கூடுதலாக ஏழு எம்.பிக்கள், கம்பஹா மாவட்டத்தில் உள்ளனர் என்பதுடன், தோல்வியடை ந்தவர்களில் பெரும்பாலானோர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

> **முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் குறைப்பது தொடர்பில், பாதுகாப்பு பிரிவு கவனம் செலுத்தியுள்ளது**

# பிரதம கொறடா ஜோன்ஸ்டன்

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்திலும், மேற்குறித்த இருவருக்கே அந்தப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோருக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.



# 2,900ஆக அதிகரித்தது

நேற்று வீடுகளுக்குத் திரும்பினர். இந்நிலையில், இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோரின் எண்ணிக்கை, 2,676ஆக அதிகரித்துள்ளது.

கொவிட் - 19 தொற்றுக்கு உள்ளான 213 பேர், இன்னும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரியவருகின்றது.

150,000 வேலைவாய்ப்பு;

# பாடவிதானத்துக்கமைய வழங்குமாறு பணிப்புரை

செப்டம்பர் 2ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கான தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்போது, வேலைவாய்ப்புக்கான தகைமையைப் பெற்றுள்ளவர்கள் கற்றுள்ளப் பாடவிதானங்களுக்கமைய தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இந்தத் தொழில்களுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள், கிராம சேவை பிரிவுகளிலும் வறுமை நிலையில் அதிகூடியவர்களாகவும் இருக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்காகப் பல மாவட்டங்களில் மேற்கொண்ட விஜயத்தின்போது, பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் குறைபாடுகள் பற்றித் தெளிவுப்படுத்திய ஜனாதிபதி, புதிய நியமனம் பெற்றவர்களை அதற்காக நியமிக்குமாறும் பணித்துள்ளார்.



பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய

# பேருவளை பிரதேச சபை உறுப்பினர் கைதானார்

■ துஷிதகுமார சில்வா



இரவில் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டுமானப் பணி தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய பேருவளை பிரதேச சபையின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தர்காநகர், அதிகாரிகொட பிரதேசத்தில் பேருவளை பிரதேச சபைக்குரிய மாலவென்கொட வீதியில் உள்ள வடிகான் கட்டமைப்பு ஊடாக அமைக்கப்பட்ட சட்டவிரோத கட்டுமானம் தொடர்பில், அளுத்கம பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (16) கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, விசாரணை செய்வதற்காக பொலிஸ் குழுவொன்று, சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளது.

இதன்போது, பேருவளை பிரதேச சபையின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதையடுத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடமையை பொறுப்பேற்க முன்

# தமிழ்ப் பிழையை திருத்திய அமைச்சர்




விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சின் பெயர்ப் பலகையிலுள்ள தமிழ்ப் பிழையைத் திருத்திய சம்பவமொன்று, நேற்று (17) இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் அவர் இன்று (18) தனது அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

உத்தியோகப்பூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், அமைச்சின் பெயர்ப் பலகையிலுள்ள தமிழ்ப் பிழையைத் திருத்தி, மொழி உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கியமை, சமூக வலைதளங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மும்மொழிக் கொள்கை இலங்கையில் அமலில் உள்ளது என்பதை உறுதிபடுத்தும் வகையில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது என, பல தரப்பிலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வாறான பிழைகள் குறித்து எதிர்வரும் காலத்தில் அமைச்சரால் கூடுதல் கவனம் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவுல்லாவுக்கு

# அமைச்சு வழங்குமாறு பிரதமருக்குக் கடிதம்

■ றியாஸ் ஆதம்



தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்கு, அந்தஸ்துள்ள அமைச்சு ஒன்றை வழங்குமாறு கோரி, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நேற்று (17) கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், "அதாவுல்லாவுக்கு ஓர் அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்படுமென, கிழக்கு மாகாண மக்கள் எதிர்பார்ப்புடன் இருந்த போதும், இறுதி நேரத்தில் அந்த விடயம் இடம்பெறவில்லை. குறித்த அமைச்சரவையில் அதாவுல்லா இல்லாமை கிழக்கு மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள், சகல மாவட்டங்களுக்கும் தலா ஒன்று வழங்கப்பட்ட போதிலும், அவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. அமைச்சுகளை 28ஆகக் குறைத்தமையால், அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருந்தாலும், ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தையும் உள்ளடக்கியதாக ஓர் அமைச்சையாவது வழங்கியிருக்க வேண்டுமென்பது இப்பிராந்திய மக்களின் எதிர்பார்ப்பாகும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

7 யானைகள் இறப்பு;

# 'காரணத்தைக் கண்டறிய தாமதமடையும்'



■ காஞ்சனகுமார ஆரியதாஸ

2019ஆம் ஆண்டில், ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில், ஹபரனை, தும்பிகுளம் காட்டில், 07 யானைகள் இறந்தமைக்கான காரணத்தை முன்வைக்க மேலும் பல மாதங்கள் தேவையென, வனஜீவராசிகள் அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க தெரிவித்தார்.

தம்புளை மாநகர சபையில், நேற்று முன்தினம் (16) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துரைக்கையில், "வனஜீவராசிகள் திணைக்களத்தில் பணியாற்றும் பலர், கவலையுடனேயே பணியாற்றுவதாகவும் அவர்களிடம், சேவைக்கான திருப்தி இல்லாமல் ஏமாற்றத்துடன் பணியாற்றுகின்றனர்" என்றும் கூறினார்.

"எனவே, எதிர்காலத்தில் அந்தப் பணியாளர்கள் திருப்தியுடன் பணியாற்றும் வகையில், அதிகாரிகள், வனஜீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள் இரண்டையும் ஒன்றாக நடத்திச் செல்லத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.

"மக்களைப் போன்றே, விலங்குகளையும் பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது. அதற்கமைய, சுற்றாடல் துறைக்கு விலங்குகள் பாரிய ஒத்துழைப்பை வழங்குவதால், நாம் பொறுப்புடன் சில தீர்மானங்களை எடுக்க வேண்டும்" என்றார்.

மன்னாரில் மஞ்சள் தூள்

# பதுக்கி வைத்து விற்பனை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் - பஸார் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில், மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு, அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அதாவது, 100 கிராம் மஞ்சள் தூள் 350 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், ஒரு கிலோகிராம் மஞ்சள் தூள் 3,500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை, பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், அப்பகுதி மக்கள் குற்றஞ்சா ட்டியுள்ளனர்.

45 சந்தேகநபர்களின்

# வங்கிக் கணக்குகளில் ரூ.2,200 மில்லியன் பணப் பரிமாற்றம்

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 45 பேரின் வங்கிக் கணக்குகளில் இருந்து 2,200 மில்லியன் ரூபாய் பரிமாற்றப்பட்டுள்ளதென, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில், கடந்த 7 நாள்களில் பெண்ணொருவர் உள்ளடங்கலாக 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த 45 பேரும், நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இவர்களின் வங்கிக் கணக்குகளில் 2,200 மில்லியனுக்கு அதிகமான பணம் பறிமாற்றப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், அந்த வங்கிக் கணக்குகளில் அந்தப் பணம் இப்போது இல்லை என்றும் இது தொடர்பான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி

# மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

■ சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால், நேற்று (17) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு வகையிலும் பின்தங்கிக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சீராக இயங்காததால், மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படாததன் பின்னணியிலேயே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கந்தையா சிவநேசன், துரைராசா ரவிகரன், ஆண்டிஐயா புவனேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, போராட்டம் இடம்பெற்ற பகுதியில், முள்ளியவளை பொலிஸார், புலனாய்வாளர்கள் உள்ளிட்ட பலரும், கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கான தீர்வு கிடைக்கும் வரை, தொடர்ச்சியாகச் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் முன்னெடு க்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குருநாகல் மேயருக்கு எதிரான

# வழக்குக்கான செலவுகளை ஏற்றது குருநாகல் நகரசபை

குருநாகலில் உள்ள புராதனக் கட்டடத்தை உடைத்தமைத் தொடர்பில் குருநாகல் மேயருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளுக்கான செலவுகளை அந்த நகரசபையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற யோசனை குருநாகல் நகரசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குருநாகல் நகரசபையின், நேற்றையக் (17) கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு 13 உறுப்பினர்கள் ஆதரவாகவும், மூவர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.


ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் நகரசை உறுப்பினர்களும், குருநாகல் நகரசபையின் முன்னாள் மேயரும் இந்த யோசனைக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

குருநாகல் நகரசபையின் நிதியிலிருந்து அந்த வழக்கு விசாரணைகளுக்காக 2.18 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில்

# பெரிய வெங்காய உற்பத்தி வெற்றி

■ ஹிரான் பிரியங்கரரர



புத்தளம் மாவட்டத்துக்குள் பெரிய வெங்காய உற்பத்தியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென, விவசாய ஆலோசகர்கள், விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன், உற்பத்தியில் வெற்றியும் கண்டுள்ளனர்.

பெரிய வெங்காய உற்பத்தி, நாட்டின் சில பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், புத்தளம் மாவட்டத்தில் விவசாய ஆலோசனைகளின் கீழ், பெரிய வெங்காய உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளதென, விவசாய ஆலோசகர் என்.ஏ.டி. கயான் தெரிவித்தார்.

இலங்கையின் பெரிய வெங்காயத் தேவையில் 90 சதவீதத்துக்கு அதிகமானவை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் காரணமாக, இலங்கை பாரிய நிதியை இழப்பதாகவும் இதனால், விவசாய அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் புத்தளம் மாவட்டத்தில் பெரிய வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# 'புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயார்'



இலங்கை மக்களால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைவாக, புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஆட்சியிலுள்ள பலமான அரசாங்கமும் அதன் அணிசேரா, நட்புறவுடனான வெளிநாட்டுக் கொள்கையும், நாட்டுக்கு நன்மை அளிக்கும் பல முக்கிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து, நேற்று (17) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட அவர், அதன் பின்னர், அலுவலக ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய போதே, மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இந்த முயற்சியில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களையும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

கொவிட் - 19 நெருக்கடிக்குப் பிந்திய நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த அவர், எதிர்வரும் வருடங்களுள், அதன் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக, இலங்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது என்றும் இதன்படி, ஏற்றுமதி, முதலீடுகள், இலங்கையர்களின் தொழில்முயற்சிகளை விரிவாக்கும் நோக்குடன், வர்த்தக திணைக்களமும் வெளிநாட்டமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.